

# வல்லாட்டம்

## சங்ககாலத் தமிழரின் செஸ் ஆட்டம்

வி. இ. குகநாதன்



# Vallattam

## The origin of Chess : The Sangam period

V. E. Kuganathan



# வல்லாட்டம்

சங்ககாலத் தமிழரின் செஸ் ஆட்டம்

வி. இ. குகநாதன்

# Vallattam

The origin of Chess : The Sangam period

V. E. Kuganathan

## முன்னுரை

செஸ் (Chess) என்றொரு ஆட்டத்தினைப் பற்றிப் பலரும் அறிந்திருப்போம். இன்று அனைத்துலக மட்டத்தில் தமிழர்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு ஆட்டமெனில் அது இந்தாட்டமேயாகும். ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னரான இந்தாட்டத்தின் வரலாறானது தெளிவாக எழுதப்பட்டுவிட்டது. அதற்கு முன்னரான இதன் வரலாறு இருண்டதாகவே இருப்பதாக வரலாற்றாளர்கள் பலரும் சொல்லுகின்றனர்; இருந்த போதிலும் குப்தர் காலத்தில் இந்தியாவில் இந்தாட்டம் தொடங்கியதாகப் பொதுக்கருத்து ஒன்றுள்ளது. குப்தர் காலத்தில் இந்தாட்டம் இருந்தது பற்றியோ அல்லது இது பின்னரான காலப்பகுதியில் பாரசீகத்தினூடாக ஐரோப்பாவினை அடைந்து, அங்கு இன்றைய செஸ் ஆட்டமாக இந்தாட்டம் பெரு வளர்ச்சி பெற்றது பற்றியோ இந்த நூலுக்கு மாற்றுக் கருத்தில்லை. எங்கு மாற்றுக்கருத்து உள்ளதெனில் இந்தாட்டமானது, குப்தர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் முன்னரே, சங்ககாலத்திலேயே தமிழர் நிலத்தில் தோன்றிவிட்டது என்பதிலேயேயாகும். சங்ககாலத்தில் செஸ் ஆட்டமானது வல்லாட்டம் என அழைக்கப்பட்டுள்ளது. இப் பெயரே இந்த நூலின் தலைப்பாகும். சங்ககாலத்திலேயே வல்லு (Chess) ஆடப்பட்டதற்கான பின்வரும் சான்றுகளை இந்த நூல் முன்வைக்கின்றது.

- ***அகழ்வாய்வுச் சான்றுகள்***
- ***இலக்கியச் சான்றுகள்***
- ***இலக்கண நூல் (தொல்காப்பியம்) சான்றுகள்***
- ***சொல்லாடல்கள்***

தமிழர் நிலத்தில் வல்லாட்டம் தோன்றியது எனில், எவ்வாறு தோன்றியது? எனப் பார்ப்போம். மூன்று வகையான கட்டாட்டங்கள்,

ஆடு புலிஆட்டம் என ஒரு படிமலர்ச்சி முறையிலான வளர்ச்சியிலேயே `வல்லாட்டம்` தோன்றியது என இந்த நூல் நிறுவ முயலுகின்றது. அதேபோன்று வல்லாட்டம் என்பது சூதாட்டம், பகடையாட்டம் போன்ற ஆட்டங்களையே குறிக்கும் என்ற தவறான புரிதல்களையும் இந்த நூல் உரிய விளக்கங்களுடன் தெளிவுபடுத்துகின்றது.

வல்லாட்டமானது இன்றிருப்பது போலவே சங்ககாலத்தில் இருக்கவில்லை என்ற உண்மையினையும் ஏற்றுக் கொண்டே, வல்லு (Chess) ஆனது சங்ககாலத்திலேயே தமிழரிடம் தோன்றிவிட்டது என்பதனை இந்த நூல் விளக்குகின்றது. வல்லாட்டத்தின் வரலாற்றினை மாற்றி எழுத வேண்டிய ஒரு பெரும் நெடுஞ்செலவின் ஒரு சிறு அடியாகவேனும் இந்த நூல் அமையும் என்ற நம்பிக்கையுடன் இந்த நூலினை நான் உங்கள் முன்வைக்கின்றேன்.

***வி.இ. குகநாதன்***

# பொருளடக்கம்


| | |
|---|---|
| சதுரங்கம் என்ற சொல் தமிழ்ச் சொல்லா? | 7 |
| வல்லாட்டம் | 10 |
| சிந்துவெளி நாகரிகத்தில் பலகையாட்டம் | 15 |
| எழுதப்பட்ட வரலாறு | 16 |
| சங்க இலக்கியங்களில் வல்லாட்டம் | 18 |
| வல்லு என்பது சூதாட்டம் / தாயம் என்ற தவறான கருத்து | 24 |
| வல்லாட்டத்துக்கான அகழ்வாய்வுச் சான்றுகள் | 27 |
| ஆடு புலி ஆட்டம் | 31 |
| சங்ககாலத்தில் காணப்பட்ட நாற்படை | 38 |
| சங்ககால 'எண்பேராயம்' - 'ஐம்பெருங்குழு' | 44 |
| திருத்தி எழுதப்பட வேண்டிய வல்லாட்டத்தின் வரலாறு | 49 |
| வல்லாட்ட அருஞ்சொற்கள் | 54 |
| வல்லாட்டத்தில் தமிழரின் நிகழ்கால நிலை | 58 |
| வல்லாட்டம் விளையாடுவதால் கிடைக்கும் நன்மைகள் | 64 |

# வல்லாட்டம்

செஸ் (Chess) ஆட்டத்துடனான பழந் தமிழரின் தொடர்புகள் பற்றி ஆய்வதற்கு முன் , இந்த ஆட்டத்துக்கான தமிழ்ப் பெயர் என்ன என்பதனைப் பார்ப்போம். இன்று பரவலாகச் செஸ் ஆட்டத்தினைக் குறிக்க `சதுரங்கம்` என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றது. சதுரங்கம் என்ற இச் சொல் தமிழா என முதலில் பார்ப்போம்.



# சதுரங்கம் என்ற சொல் தமிழ்ச் சொல்லா?

சதுரங்கம் என்ற சொல்லானது சதுரம் , அங்கம் ஆகிய இரு சொற்களைக் கொண்டமைந்த ஒரு சொல்லாகும். `சதுரம்` என்ற சொல் தமிழா! என்பதிலும் குழப்பமுண்டு. `சதுர்` என்ற வடமொழிச் சொல்லுடன் `அம்` என்ற விகுதி சேர்ந்ததே `சதுரம்` என்றொரு கருத்துண்டு; அதனை ஏற்றால் அச்சொல் (சதுரம்) வடமொழிச் சொல்லாகும். சதுர்/ चतुर என்ற சொல்லினைக் கொண்ட `சதுர் வர்ணம் மயா சிருஷ்டம்` (நான்கு சாதிகளையும் நானே படைத்தேன்) எனும் பகவத்கீதை வசனம் இங்கு நோக்கத்தக்கது. அவ்வாறாயின் சதுரம் என்பதனைக் குறிப்பதற்கான தமிழ்ச் சொல் என்ன? என்ற கேள்வி எழலாம்? `சதுக்கம்` அல்லது `சமநாற்கரம்` என்பது சதுரத்தினைக் குறித்த தூய தமிழ்ச் சொல்லாகும் . நாற்புறமும் சமன் செய்தல் (சதுக்குதல்) என்ற பொருளில் அமைந்த நல்லதொரு தமிழ்ச்சொல்லே `சதுக்கம்` என்பதாகும். சிலப்பதிகாரத்தில் வரும் `சதுக்க பூதம்`, திருமுருகாற்றுப்படையில் வரும் `சதுக்கமும் சந்தியும்` போன்ற பழந் தமிழ் இலக்கியங்களிலும் `அண்ணா சதுக்கம்` எனும் இன்றைய இடப் பெயரிடலிலும் சதுக்கம் என்ற சொல்லாட்சியினைக் காண முடியும். எனவே ஆங்கிலத்தில் `Square என்ற சொல்லினைக் குறிப்பதற்கான நல்லதொரு தமிழ்ச் சொல்லாக `சதுக்கம்` என்ற சொல்லினை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**அதேவேளை வேர்ச்சொல் ஆய்வாளரான இராம.கி அவர்கள் சதுரம் தமிழே எனப் பின்வருமாறு கூறுவார்.**

***“4 சம-கரங் கொண்ட சதுரத்தின் சொற்பிறப்பு எளிதானது. தமிழில் எண்ணுச்சொற்கள் 0, 1, 2, 3, 5, 10, 100, 1000 ஐ ஒட்டியெழுந்தன. மற்ற எண்ணு ச்சொற்களெல்லாம் இவற்றிலிருந்து பெறப்பட்டவையே. நாலு என்பது ஐந்திற்குறைந்த பொருளில் (ஒருவிரல் மடங்கி) நலிந்த கையைக்குறித்து நலிகை >நாலிகை >நால்கை என்றானது. நலிதலின் இன்னொருசொல் சொதுத்தல் ஆகும்; சொத்தை/***

*சொட்டையென்ற சொல்லையும் இங்கு எண்ணிப்பார்க்கலாம். சொடுக்கை/சொதுக்கை = நலிந்த கை, (ஒருவிரல் இங்கும் மடங்கியது. இன்னொருவகையிற் சொத்தாங்கை >சோத்தாங்கை என்றாகும், வலக்கைப் பழக்க ஆதிக்கத்தால் "குறைந்த கை" என்று பொருள்கொண்டு இடக்கையைக் குறிக்கும்.) கையின் இன்னொரு சொல் கரம்.சொதுகரம் >சதுகரம் >சதுரம் என்று இச்சொல்லெழும் ".*

மேலுள்ள சதுரத்துக்கான விளக்கத்தினைத் தந்த இராம.கி அவர்களே சதுரங்கம் என்ற சொல்லின் பின்னொட்டான `அங்கம்` என்பது ஒரு இரு பிறப்புச் சொல் எனக் கூறுகின்றார். எனவே நீங்கள் சதுரம் என்ற சொல்லினைத் தமிழ் எனக் கொண்டாலும் சரி, அல்லது அதனைத் தமிழ் அல்ல என விடுத்தாலும் சரி, `சதுரங்கம்`என்ற கூட்டுச் சொல்லினை ஒரு தூய தமிழ்ச் சொல்லாகக் கூற முடியாது.

சமற்கிருதத்தில் சதுரங்க (चतुरङ्ग) என்றால் `நாற்படை` என்றொரு பொருளுண்டு, அந்த வகையில் `Chess`விளையாட்டினைக் குறிப்பது `சதுரங்க ` என்று இப்போது சொல்வோருமுள்ளனர். அதேவேளை, `சதுரங்க` என்ற சமற்கிரதச் சொல்லானது நாற்படையினை மட்டுமே குறிக்கும், மாறாக அச் சொல் குறித்தது விளையாட்டினையல்ல, அது பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு பொருள் என்போருமுள்ளனர். இந்த `சதுரங்க` என்ற சொல்லே தமிழில் சதுரங்கம் ஆகியது என்றொரு கருத்துமுண்டு.

எனவே இப் பகுதியில் மேலுள்ளவற்றினைத் தொகுத்துப் பார்த்தால், `சதுரங்கம்` என்ற சொல்லினைத் தூய தமிழ்ச் சொல் எனக் கூற முடியாது.

இந்த ஆட்டத்தினைக் குறிக்க வேறு தமிழ்ச் சொற்களுள்ளனவா எனப் பார்த்தால், `நாற்படையாட்டம்` , `செங்களம்` ஆகிய சொற்கள் அரிதாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை தமிழ்ச் சொற்களே என்பதில் ஐயமில்லை. இதில் நாற்படையாட்டம் என்ற சொல்லினை எடுத்தால் அது `சதுரங்க` என்ற வடமொழிச் சொல்லுக்கான தமிழாக்கம் போலவே காணப்படும். மேலும் இச் சொல்லுக்கான பழந் தமிழ் இலக்கியச் சான்று எதுவுமில்லை. செங்களம் என்ற சொல்லுக்கான இலக்கியச் சான்றுண்டு.

**" செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த**
**செங்கோ லம்பிற் செங்கோட்டி யானைக் "**

**: குறுந்தொகை 1: 1–2**

மேலுள்ள பாடலில் செங்களம் என்ற சொல் குறிக்கப்பட்டுள்ள போதும், அங்கு செங்களம் எனப் போர்க்களமே குறிப்பிடப்படுகின்றது. இங்கு காய்களை நகர்த்தி ஆடப்படும் ஆட்டத்துக்கும் செங்களம் என்ற சொல்லுக்கும் எதுவிதத் தொடர்புமில்லை. எனவேதான் பொருத்தமான வேறொரு சொல்லினைத் தேட வேண்டியுள்ளது. அந்த வகையில் நெடுங்காலமாக எம்மால் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்ட ஒரு பழந் தமிழ்ச் சொல்லே `வல்லாட்டம்` என்பதாகும். இனி, இச் சொல்லினைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

♦♦♦



# வல்லாட்டம்

சதுரங்கம் என்ற சொல் தூய தமிழ்ச் சொல்லன்று எனவும் அதற்கான தமிழ்ச் சொல்லாக `வல்லாட்டம்` என்ற சொல்லினைப் பயன்படுத்தலாம் எனவும் பார்த்தோம். இப்போது வல்லாட்டம் என்ற சொல்லின் பிறப்பினைப் பார்ப்போம். இச் சொல்லாக்கமானது (வல் + ஆட்டம்) `வல்` என்ற வேர்ச் சொல்லினை அடியாகக் கொண்டது.

**வல் + ஆட்டம் = வல்லாட்டம்**

`வல்` என்றால் `நகர்` (Move ) என்றொரு பொருளுமுண்டு. `வலவன் ஏவா வானூர்தி` (புறநானூறு 27:8) என்ற பாடலில் அப் பொருளிலேயே (நகர்) `வல் ` என்ற சொல் இடம் பெறுகின்றது (நகர்த்துபவன் அல்லது செலுத்துபவன் இல்லாத வானூர்தி). இந்த இடத்தில் `Chess` என்ற ஆங்கிலச் சொல்லின் தோற்றுவாயினைப் பார்ப்பது பொருத்தமானது. இச் சொல்லானது 'esches' என்ற பழைய பிரெஞ்சுச் சொல்லின் வழி வந்தது என்பதும், அப் பிரெஞ்சுச் சொல்லின் பொருளும் ஒரு வகையான நகர்வே, இன்னமும் குறிப்பாகச் சொன்னால் `checkmate'` என்ற நகர்வினைக் குறிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது . இந்த இடத்தில் `வல்லாட்டம்` என்ற சொல்லின் வேர்ச் சொல்லான `வல்` என்பதும் `நகர்வு` என்பதனைக் குறிப்பது நோக்கத்தக்கது (Chess என்ற ஆங்கிலச் சொல்லின் தோற்றத்துக்கு வேறு விளக்கங்களும் சொல்லப்பட்டாலும், நான் இங்கு குறிப்பிட்ட விளக்கமே பொதுவாக ஏற்கப்பட்ட விளக்கமாகும்). இங்கு ஆங்கிலச் சொல்லினையோ அல்லது ஆங்கிலச் சொல்லின் மூலமான பழைய பிரெஞ்சுச் சொல்லினைப் ( esches ) பார்த்தோ தமிழ்ச் சொல் அமையவில்லை ; ஏனெனில் வல் என்ற சொல் காலத்தால் முந்தியது.

`வல்` என்ற சொல் தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது.

**'வல்' என் கிளவி தொழிற்பெயர் இயற்றே.**
**நாயும் பலகையும் வரூஉம் காலை,**
**ஆவயின் உகரம் கெடுதலும் உரித்தே;**
**உகரம் கெடு வழி அகரம் நிலையும்.**

: தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல் 78–79

மேலுள்ள பாடலில் சொல்லப்படுவது என்னவெனில் `வல்`என்ற சொல்லுடன் நாய் என்ற சொல் சேர்ந்து `வல்லநாய்` என்ற சொல்லும், வல் என்ற சொல்லுடன் பலகை என்ற சொல் சேர்ந்து `வல்லப்பலகை` (வல்லுப்பலகை) என்ற சொல்லும் வரும் என்பதாகும்.

வல்+நாய் = வல்லநாய்

வல்+பலகை = வல்லப்பலகை / வல்லுப்பலகை

மேலுள்ள பாடலில் இலக்கணம் பற்றியே பேசப்படுகின்றது. இலக்கணத்தினை விளங்கப்படுத்துவதற்காக எடுத்தாளப்பட்ட எடுத்துக்காட்டுகளே எமக்கு முதன்மையானவை. இங்கு வல்லப்பலகை/ வல்லுப்பலகை எனப்படுவது வல்லாட்டம் ஆடப்படும் பலகையினையே ( Chess board ). வல்லு என்றும் இந்த ஆட்டத்தினை அழைக்கலாம். வல்லநாய் எனப்படுவது பலகையில் நகர்த்தப்படும் ஒரு வகைக் காய்களைக் குறிக்கின்றது; இன்னமும் தெளிவாகச் சொன்னால் `காலாள்` ( pawn ) எனும் காயினையே `வல்லநாய்` என்ற சொல் குறிக்கின்றது. எனவே மேலுள்ள தொல்காப்பியப் பாடலில் இடம்பெறும் சொற்களையும் அவற்றுக்கு நிகரான இன்றைய ஆங்கிலச் சொற்களையும் கீழே காண்போம்.

**வல்லு = Chess**

**வல்லாட்டம் = Chess game**

**வல்லுப்பலகை (வல்லப்பலகை) = Chess Board**

**வல்லநாய் (வல்லுநாய்) = Pawn**

வல்லாட்டம் என்ற சொல்லில் `வல்` என்ற முன்னொட்டினைப் பார்த்தோம், இப்போது பின்னொட்டான `ஆட்டம்` என்ற சொல்லினையும் சுருக்கமாகப் பார்த்து விடுவோம். விளையாட்டுகள் (Sports) என்பன பெருமளவுக்கு உடல்சார்ந்தும், ஆட்டங்கள் (Games) என்பன பெருமளவுக்கு மூளை சார்ந்தும் இருப்பன என வேறுபடுத்திக் காட்டுவர். இந்த வகைப்பாட்டில் வல்லு என்பது ஓர் ஆட்டமாகவே அமைகின்றது. தமிழில் ஆட்டம் என்பதற்கு அசைவு என்றொரு பொருளுமுண்டு.

மேலுள்ள விளக்கங்களைப் படிக்கும் பலருக்கும் தொல்காப்பிய காலத்திலேயே வல்லாட்டம் இருந்ததா என்ற ஐயம் ஏற்படும். எனவே வல்லாட்டத்தின் வரலாற்றினைச் சுருக்கமாகப் பார்த்து விடுவோம்.

♦♦♦

# வல்லாட்டத்தின் தோற்றம்

பொதுவாக இந்தாட்டமானது இந்தியாவில் குப்தர் காலத்தில் தோன்றியது என்றே வரலாற்றில் பதிந்துள்ளனர். போரின் போது குப்த பேரரசினைச் சேர்ந்த சிற்றரசர் ஒருவர் கொல்லப்பட்ட பின்பு, அவர் எவ்வாறு படைகளை நகர்த்திப் போர் புரிந்து, இறுதியில் கொல்லப்பட்டார் என்பதனைக் காய்களை உருவகப்படுத்தி நகர்த்திக் காட்டிய போது, இந்தாட்டம் பிறந்தது எனவும் , அதற்குச் `சதுரங்க` என்று பெயரிட்டனர் எனவும் சொல்வார்கள். பொது ஆண்டுக்குப் பிந்திய நான்காம் நூற்றாண்டு முதல் பொது ஆண்டுக்குப் பிந்திய ஆறாம் நூற்றாண்டு வரையான காலத்தினையே குப்தப் பேரரசின் காலம் என்பர். இந்த வகையில் பொ.ஆ ஆறாம் நூற்றாண்டளவிலேயே (CE 6th century ) இந்த ஆட்டமானது கண்டுபிடிக்கப்பட்டது என்பர். இந்த நிலையில் தமிழ்நாடு அரசு வெளியிட்ட கீழடி அகழ்வாய்வினையே எடுத்துக் கொள்வோம். கீழடி பற்றிக் கூறும் `கீழடி 4` கையேட்டில் எண்பதுக்கு அதிகமான விளையாட்டுக் காய்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும், அதனைத் தமிழ்நாடு அரசின் அதிகார முறையிலான `கீழடி 4 ` கையேட்டில் “எண்பதுக்கு அதிகமான சதுரங்கக்காய்கள்” என்றே குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது.



திறமையை வெளிப்படுத்தும் வகையில் விளையாடும் சதுரங்க விளையாட்டிற்கு பயன்படும் பல்வேறு அளவிலான 80 சதுரங்கக் காய்கள் கிடைத்துள்ளன.

கீழடியில் அதிக அளவில் கிடைத்துள்ள இந்தத்தொல்பொருட்கள் சங்க காலத்தில் ஆண், பெண், சிறுவர்கள் விளையாட்டினை கண் முன்னே படம்பிடித்துக் காட்டுகின்றன.

மேலே `கீழடி 4` கையேட்டின் 14ஆம் பக்கத்தின் ஒரு பகுதியினைக் காணலாம். இங்கு கீழடியில் கிடைத்த சான்றுகள் சங்க காலத்தினைச் சேர்ந்தவை என்பது நோக்கத்தக்கது, அதாவது குப்தர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டவையாகும். எனவே குப்தர் காலத்துக்கு முன்னரே இந்த ஆட்டமானது இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது. அவ்வாறாயின் ஏன் குப்தர் காலத்துக்குப் பின் இழுக்கின்றார்கள் எனில் , அது தமிழரின் பெருமைகள்- தொன்மைகள் என்பவற்றினை இருட்டடிப்புச் செய்யும் வழமையான ஒரு நுட்பமாகும். அந்தப் பண்பாட்டு அரசியலுக்குள் நாம் போகாமல் , வல்லாட்டத்தின் வரலாற்றினைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

வல்லாட்டமானது இன்றிருப்பது போல 1940 களுக்கு முன்னர் இருந்ததில்லை, 19ஆம் நூற்றாண்டில் இவ்வாறு இருந்ததில்லை, 16ம் நூற்றாண்டில் இவ்வாட்டமானது பெரு மாறுதல் பெற்றது, 12ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் பெரு மாற்றம் பெற்றது; இவ்வாறு காலத்துக்குக் காலம் பல்வேறு மாற்றங்களை அடைந்தே இன்றைய நிலைக்கு வந்துள்ளது. நீண்டகாலப்போக்கில் இடம்பெற்ற ஒரு படிமுறையிலான படிமலர்ச்சியே இன்றைய வல்லாட்டமாகும். இன்றைய ஆட்டத்தில் வலுவான காயாக இருப்பது அரசி ( Queen ) ஆகும். இந்த அரசி என்ற காயானது பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்ததில்லை. இன்றைய அரசிக்கு முன்னர் இருந்த காயினை `Vizier` என அழைத்திருந்தனர் (Vizier) ஒரு ஆண் பால் காயாகும்). `விசியர்` ( Vizier ) எனப்படும் இப் பெயரினை இன்றும் அருங்காட்சியகங்களில் காணலாம், நாட்டினை மேற்பார்வை செய்யும் ஒரு வகையான அமைச்சர் பொறுப்பினையே அவ்வாறு அழைத்தனர். இக் காயே பிற்காலத்தில் `அரசி`யாக உருவெடுக்கின்றாள், தொடக்க கால அரசி வெறுமனவே குறுக்காக ஒரு கட்டத்துக்கு மட்டுமே நகரக் கூடியதாகவிருந்தாள். இன்றைய அரசி குறுக்கே மட்டுமல்லாமல் பக்கவாட்டில் கூடப் பல கட்டங்களைக் கூடத் (தடையில்லாதவிடத்து) தாண்டக் கூடியவளாக பேருரு எடுத்துள்ளாள். இந்த மாற்றங்கள் எல்லாம் ஐரோப்பாவிலேயே இடம் பெற்றது என்பதனையும் ; அப்போது ஐரோப்பாவில் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் கூட, அரசி வலுப் பெற்றதில் தாக்கம் செலுத்தியிருந்தன என்பதையும் சேர்த்து நோக்க வேண்டும்.

பிசப் ( Bishop ) என இன்று அழைக்கப்படும் காய் கூட ஆயிரத்தி இருநூறுகளின் நடுப் பகுதிகளிலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றது. இங்கும் ஐரோப்பாவில் அக் காலத்தில் மத குருக்கள் பெற்றிருந்த

முதன்மையும் இக் காயானது அறிமுகப்படுத்தப்படுவதற்கும் , பின்னர் 14ஆம் நூற்றாண்டில் மேலும் வலுமையடைவதற்கும் காரணமாகும். இவற்றினை எல்லாம் நான் இங்கே ஏன் குறிப்பிடுகின்றேன் எனில் வல்லாட்டமானது தொடக்கம் முதலே இன்றிருப்பது போல இருந்திருக்கக்கவில்லை, மாறாகக் காலத்துக்கேற்ப மாறியே வந்துள்ளது. சுருக்கமாகச் சொன்னால், ஒரு படிமலர்ச்சிச் செயல்முறையிலேயே ( evolution process ) இன்றைய நிலைக்கு இந்த வல்லாட்டம் வந்து சேர்ந்துள்ளது.

♦♦♦

# சிந்துவெளி நாகரிகத்தில் பலகையாட்டம்

சிந்துவெளி நாகரிகத்தினை எடுத்துக்காட்டும் அகழ்வுச் சான்றுகளில் ஒரு வகையான `பலகையாட்டம்` காணப்படுகின்றது. இது பற்றி ரா (S. R. Rao ) என்பவர் எழுதிய `Lothal: A Harappan Port Town`, (by S. R. Rao) எனும் பொத்தகத்திலும் குறிப்புகளுண்டு. சிலர் இப் பலகை ஆட்டத்தின் வழி வந்ததே இன்றைய வல்லாட்டம் என்பர்.



வல்லாட்டத்தின் வரலாறு பற்றிய பல நூல்களில் உலகளவில் மிகவும் பரவலடைந்த நூலாக அமைந்துள்ள, முர்ரே ( H. J. R. Murray ) என்பவர் எழுதிய `A History of Chess` என்ற நூலிலும் பலகை ஆட்டம் (Board game ) எனச் சிந்துவெளியில் காணப்பட்ட ஆட்டத்தினைக் குறிப்பிடுகின்றார். அவர் இதனைச் செஸ் என ஏற்காத போதும் , அதற்கான முன்னோடி என்கின்றார். இது போன்றே எகிப்திய மெசப்பொத்தேமிய நாகரிகத்திலும் பலகையினை வைத்து விளையாடும் விளையாட்டுகள் இருந்துள்ளன என்பதனை அகழ்வாய்வுச் சான்றுகள் மூலம் காணலாம். இவை எல்லாம் இற்றைக்கு ஆகக் குறைந்தது நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பலகை ஆட்டத்துக்கான சான்றுகளாகும். இப் பலகை ஆட்டங்களினை வல்லாட்டம் எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளாமைக்கு, இந்தாட்டம் பற்றிய மேலதிக சான்றுகளில்லாமையே காரணமாகும், குறிப்பாக இலக்கியச் சான்றுகளில்லாதமையே காரணமாகும்.

♦♦♦

# எழுதப்பட்ட வரலாறு :–

மேற்குலகில் எழுதப்பட்டுள்ள வரலாற்றில் குறித்த ஆட்டமானது பொதுவாக ஏழாம் நூற்றாண்டளவில் இந்தியாவிலிருந்து, அராபியர்களால் பாரசீகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு சில மாற்றங்களுக்கு உள்ளாகி, ஐரோப்பாவினை அடைந்து, அங்கு இன்றைய வடிவத்தினை ஒரு படிமலர்ச்சி மூலமடைந்தது எனச் சொல்லப்படுகின்றது. பேராசிரியர் பிஷ்க் (Prof. Daniel Willard Fiske ) அவர்களின் கருத்துப்படி `ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தாட்டம் எவ்வாறிருந்தது என்பது பற்றிய தெளிவான ஆவணங்கள் எதுவுமில்லை`. இப் பேராசிரியரின் கருத்தினை முர்ரே ( H. J. R. Murray) அவர்களும் ஏற்றுக்கொள்கின்றார். முர்ரே எழுதிய `A History of Chess` எனும் நூல் வல்லாட்டத்தின் வரலாறு பற்றிய நூல்களில் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு நூலாகும் (செஸ் விளையாட்டின் வரலாறு பற்றி அறிய விரும்பும் ஒவ்வொருவரும் கட்டாயமாகப் படிக்க வேண்டிய ஒரு நூல் இதுவாகும்). ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகள் உழைத்து, இதற்காகச் சில மொழிகளைக் கற்று, பெரும் பாடுபட்டு, இந்த நூலினை 1913ஆம் ஆண்டு முர்ரே வெளியிட்டிருந்தார். இந்த நூல் இந்தியாவில் செஸ் ஆட்டமானது எவ்வாறு உருப் பெற்றது எனப் பல பக்கங்களில் பேசுகின்றது. இதற்காக அவர் பல சமற்கிரத மொழியிலான இலக்கியங்களையும், ஒரு சில பிராகிரத மொழியிலான பவுத்த நூல்களையும் எடுத்துக் காட்டுகின்றார். ஓரிடத்தில் கூட அவர் தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடவில்லை. இது அவரது பிழையல்ல, அக் காலப் பகுதியில் (1913) இந்தியா என்றாலே சமற்கிரதம்தான் என்றொரு மாயையினைச் சிலர் ஏற்படுத்தியிருந்தனர். தமிழ் இலக்கியங்களைப் பற்றித் தமிழரில் பலரே பெரிதும் அறிந்திருக்காத நிலையில் , எவ்வாறு ஐரோப்பியர் அறிவார்கள்.

முர்ரே அவர்கள் `அஷ்டாத` (Ashtada ) என்ற சமற்கிரத இலக்கியங்கள் சொல்லும் ஒரு வகை ஆட்டத்தினைச் `செஸ்` விளையாட்டின் தொடக்கமாகக் கொள்ளலாமா! என இந்த நூலில் சிந்திக்கின்றார். அதே வேளை புராணங்களில் குறிப்பிடப்பட்ட

பலராமன்- ருக்மணி விளையாடிய ஆட்டம், மகாபாரதத்தில் தர்மரும் சகுனியும் ஆடிய ஆட்டம் என்பவற்றினையும் காட்டி, அஷ்டாத ஆட்டமானது கட்டைகளை உருட்டி ஆடும் தாயம் போன்ற ஆட்டமா! என்ற கேள்வியினையும் எழுப்புகின்றார். இந்த ஆட்டம் பற்றிய முதலாவது இலக்கியச் சான்றாக `மகாபாஷ்ய` ( Mahabhashya ) என்ற நூலினை அடையாளம் காட்டுகின்றார். பாணினி, மகாபாஷ்ய போன்ற நூல்களுக்கு காலத்தால் முற்பட்ட தொல்காப்பியம் எனும் நூலினைப் பற்றி முர்ரே அறிந்திருக்கவில்லை.தொல்காப்பியமானது இற்றைக்கு 2500 ஆண்டுகள் காலத்தால் முற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (சிலர் இதனை 2700 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் கூறுவர்). தொல்காப்பியம் குறித்த காலக்கணிப்பில் வேறுபாடுகளுள்ள போதும், `மகாபாஷ்ய`எனும் பொ.ஆ.மு இரண்டாம் நூற்றாண்டு நூலினை விடக் காலத்தால் தொல்காப்பியம் முந்தியது என்பது தெளிவு. தொல்காப்பியத்தில் `வல்லு`, `வல்லப்பலகை` போன்ற சொற்கள் இடம் பெற்றிருப்பதனை ஏற்கனவே இந்த நூலில் பார்த்தோம், எனவே செஸ் குறித்த சொல் இந்திய இலக்கியங்களில் முதன் முதலில் தமிழிலேயே கிடைக்கின்றது.

இந்த நூலில் இதுவரை தொல்காப்பியம் எனும் இலக்கண நூலில் `வல்லு` எனும் ஆட்டம் தொடர்பாகக் குறிக்கப்பட்டுள்ளது என்பதனையும் , கீழடி அகழ்வாய்வில் வல்லுக்காய்கள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் பார்த்தோம்; இனி, இந்தாட்டம் தொடர்பாக இலக்கியச் சான்றுகள் இருக்கின்றனவா எனப் பார்ப்போம்.

♦♦♦.



## சங்க இலக்கியங்களில் வல்லாட்டம்

சங்க இலக்கியங்கள் எனப்படுபவை தமிழிலுள்ள எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய தொகுப்பு நூல்களாகும்.

எட்டுத்தொகை நூல்கள்: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

பத்துப்பாட்டுநூல்கள்: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, பட்டினப் பாலை, மலைபடுகடாம்.

சங்க இலக்கியம் (Sangam literature) எனப்படுவது பொது ஆண்டுக்கு முந்தைய 500 ஆம் ஆண்டிலிருந்து (BCE 500) பொது ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்விலக்கியங்கள் ஆகும்., அண்மையில் கீழடி அகழ்வாய்வு போன்ற தொல்லியல் ஆய்வுகள் சங்க காலத்தினை பொது ஆண்டுக்கு முந்திய ஆறாம் நூற்றாண்டவரைக் கொண்டு சென்றமை தெரிந்ததே! இத்தகைய தொன்மை வாய்ந்த சங்க இலக்கியங்களில் வல்லாட்டம் தொடர்பான சான்றுகள் ஏதாவது உள்ளனவா! என இனிப் பார்ப்போம்.

வல்லு ஆடுவதாகவிருந்தால் முதலில் வல்லுப்பலகை தேவை. வல்லுப்பலகை அல்லது வல்லப்பலகை பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளதனை ஏற்கனவே பார்த்தோம். இப்போது சங்கப் பாடல்களில் தேடிப் பார்ப்போம்.

**“குறிப்பு காண் வல்லு பலகை எடுத்து நிறுத்து அன்ன**
**கல்லா குறள கடும் பகல் வந்து எம்மை**
**இல்லத்து வா என மெய் கொளீஇ எல்லா நின்”**

**: கலித்தொகை 94: 13- 15.**

மேலுள்ள கலித்தொகைப் பாடலில் குள்ளன் ஒருவன் ஒரு பெண்ணினை மறித்துத் தனது விருப்பத்துக்கு இணங்குமாறு அப் பெண்ணைக் கேட்டபோது, அப் பெண் வல்லுப்பலகை ஒன்றினை எடுத்து நிறுத்தி வைத்தது போல இருக்கின்றாய் என ஏளனம் செய்யும் செய்தி சொல்லப்படுகின்து. பொதுவாக ஒருவரை `குறளன்`(குள்ளன்)

என எப்போது அழைப்போம்? மூன்றடி அல்லது அதற்கும் குறைவாக உயரம் உள்ள ஒருவரைத்தான் குள்ளன் என அழைப்போம். இன்றைய உலகில் வல்லுப்பலகையின் நீளமும் அகலமும் 21 அங்குலங்கள் எனப்படுகின்றது . இது காலத்துக்கும் நாடுகளுக்கும் ஏற்ப வேறுபட்டுக் காணப்படும். இங்கு குறளனின் உயரம் ஏறத்தாழ இன்றைய செந்தரப்படுத்தப்பட்ட வல்லுப்பலகையின் நீள அகலத்துடன் ஒத்துப் போவதனைக் காணலாம். இப்பாடலில் மேலுமொரு உட்கிடையான செய்தியுள்ளது, வல்லுப்பலகை நிறுத்தியது போன்ற உயரம் என்று குறிப்பிடப்படுகின்றதே தவிர, நிலைக்குத்தாக நிறுத்தப்பட்டதா அல்லது பக்கவாட்டில் நிறுத்தப்பட்டதா எனச் சொல்லப்படவில்லை, அதாவது வல்லுப்பலகையின் நீளம் சொல்லப்படுகின்றதா? அல்லது அகலம் சொல்லப்படுகின்றதா என்ற குறிப்பு இல்லை; இதற்குக் காரணம் வல்லுப்பலகையின் நீள-அகலம் சமமானது என நாம் உய்த்துணரலாம். வல்லுப்பலகையும் நீள அகலத்தினைச் சமனாகக் கொண்ட சதுக்க வடிவமுடையதே (Square shape ) என்பது இங்கு நோக்கத்தக்கது.

கலித்தொகை 94ஆவது பாடலின் மூலம் வல்லுப்பலகையின் வடிவம் சதுக்கம்(சதுரம்) எனவும் வல்லுப்பலகையின் நீள-அகலம் இன்றைய அளவுடன் ஏறக்குறைய ஒத்துப் போவதனையும் கண்டுகொண்டோம். இனி, வல்லுப்பலகை பற்றிய இன்னொரு சங்ககாலப் பாடலினைப் பார்ப்போம்.

**" நரை மூதாளர் அதிர் தலை இறக்கி**
**கவை மனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய**
**வரி நிற சிதலை அரித்தலின் புல்லென்று**
**பெரு நலம் சிதைந்த பேளம் முதிர் பொதியில்"**

**: அகநானூறு 377: 7-10**

மேலுள்ள அகநானூற்றுப் பாடலில் நப்பாலத்தனார் (பாலை மாறோக்கத்து காமக்கணி நப்பாலத்தனார்) என்ற புலவர் மூத்தோர் சிலர் வல்லு விளையாடிய செய்தியினையும் , அவர்கள் வெல்வோமா / தோற்போமா என்ற பதற்றத்தில் தலையினைத் தொங்கவிட்ட வண்ணம் விளையாடிய செய்தியினையும் , அவர்கள் அவ்வாறு விளையாடாத வேளைகளில் வல்லப்பலகையினைக் கறையான் அரித்த செய்தியினையும் கூறுகின்றார்.

அகநானூற்று 377 ஆவது பாடலில் வல்லு ஆடும் முதியோர்கள் தொழில்முறையிலான ஆட்டக்காரர்களல்ல (சங்ககாலத்தில்

அவ்வாறான தொழில்முறையிலான ஆட்டக்காரர்களிருந்திருக்க வாய்ப்பில்லை), தொடர்ந்து ஆடுபவர்களுமல்ல (கறையான் அரிக்கும் செய்தி மூலம் இதனை அறியலாம்), எப்போதாவது பொழுது போக்குக்காக ஆடுபவர்களே! இத்தகையோர் ஆடும் போது, ஆட்டத்தின் வெற்றிப் போக்கு மாறி மாறி ஒவ்வொரு நகர்வுக்கு ஏற்ப வரும். இன்றைய வருணனையாளர்களின் மொழியில் சொல்வதானால் `Roller Coaster game ` எனலாம். இவ்வாறு வெற்றி தோல்வி மாறி மாறி வருவது போன்று இருப்பதாலேயே பதற்றத்துடன் விளையாடினர் என்ற செய்தி சொல்லப்படுகின்றது. `அதிர் தலை இறக்கி` (377: 7) என்ற வரி மூலம் குனிந்த தலையுடன் (பலகையில் முழுக் கவனம் செலுத்துவதற்காக) விளையாடிய செய்தியும் கூறப்படுகின்றது.

**" நரை மூதாளர் நாய் இட குழிந்த**
**வல்லின் நல் அகம் நிறைய பல் பொறி"**

**: புறநானூறு 52 : 14-15**

மேலுள்ள புறநானூறு 52 ஆவது பாடலில் மருதன் இளநாகனார் வல்லுப்பலகையில் வல்லநாய்கள் (காய்கள்) தொடர்ந்து நகர்த்தப்பட்டதால் , வல்லப்பலகை குழிந்த செய்தியினைச் சொல்லுகின்றார். எனவே வல்லுப்பலகையுடன் காய்கள் இருந்த செய்தியும் புறநானூற்றுப் பாடல் மூலம் எமக்குத் தெரிய வருகின்றது.

மேலுள்ள பாடலில் `வல்லநாய்` இருந்த செய்தியுள்ளது, அதே போலத் தொல்காப்பியமும் `வல்லநாய்`பற்றிக் குறிப்பிட்டதனை ஏற்கனவே பார்த்தோம். இனி வல்லநாயின் வடிவம் எப்படியிருக்கும் எனப் பார்ப்போம்.


வல்லுக்காயின் வடிவம் எப்படியிருக்கும் எனப் பார்ப்பதற்கு நாம் பிற்காலத்தில் இயற்றப்பட்ட ஒரு இலக்கியப் பாடலுக்கே வர வேண்டியுள்ளது. தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான `குற்றாலக் குறவஞ்சி` எனும் நூலானது திரிகூடராசப்பர் எனும் புலவரால் 18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட ஒரு நூலாகும். அதிலுள்ள ஒரு பாடலில் இளம் குறத்திப் பெண் (பருவ மகள்) ஒருவரின் உடலமைப்பு வருணிக்கப்படுகின்றது.

**" வல்லை நிகர்முலை இல்லை எனும் இடை**
**வில்லை அனநுதல் முல்லை பெருநகை"**

**: குற்றாலக் குறவஞ்சி**

மேலுள்ள பாடல் வரிகளில் தலைவியின் அழகினைச் சொல்லும் போது, அவளது மார்பகமானது `வல்லுக்காய்` போன்றிருந்தது என்ற

செய்தி கூறப்படுகின்றது. இங்கு ஒரு நெல்லிக்காயினையோ அல்லது சிறு மாங்காயினையோ உவமையாகக் கூறாமல் ``வல்லுக்காயினை` உவமையாகக் கூறுவதற்கு பாடலின் அமைவு (அதாவது எதுகை மோனை) காரணமாகவிருந்தது; இங்கு தலைவியின் பெயரும் வல்லி (வசந்தவல்லி) என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு எமக்குத் தேவையான செய்தி ஒன்றேயொன்றுதான், அது வல்லுக்காயின் வடிவம். இப்போது பாடலில் மேலே சொன்ன உவமையினை மனக்கண் முன் நிறுத்திக்கொண்டு, இன்றும் வல்லாட்டத்தில் பயன்படுத்தப்படும் ஒரு வல்லுக்காயான `காலாள்` (pawn) இன் வடிவத்தினைக் கீழே படமாகப் பாருங்கள்.



அச்சொட்டாக உவமையாகச் சொல்லப்பட்ட வல்லுக்காய் என்பது உவமேயத்துடன் ஒத்துப் போகின்றது அல்லவா! எனவே இப் பாடல் வரிகளின் மூலம் சங்ககாலப் பாடல்வரிகளில் குறிப்பிடப்படும் வல்லநாய் அல்லது வல்லுக்காய் என்பது வல்லு விளையாட்டில் நகர்த்தப்படும் காய்களே என்பது தெளிவாகின்றது .

மேலுள்ள சங்ககாலப் பாடல்களில் வல்லுப்பலகை மற்றும் வல்லுக்காய்கள் பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளதனைக் கண்டோம். இங்கெல்லாம் உவமை அணியில் வருகின்ற உவமானங்களாகவே வல்லுப்பலகையும் வல்லுக்காயும் சொல்லப்படுகின்றன. தமிழில் உவமானமாக ஒன்று சொல்லப்படுகின்றது எனில் அவ்வாறு உவமானமாகச் சொல்லப்படும் பொருள் அப்போது நன்கு அறியப்பட்ட ஒரு பொருளாகவே இருக்கும் என்பது பொது வழக்காகும். அந்த வகையில் பார்த்தால் வல்லாட்டம் அன்றைய தமிழரிடம் நன்கு அறிமுகமாகியிருந்தது தெரிய வருகின்றது. பழந் தமிழேடுகள் பல அழிக்கப்பட்டு விட்ட நிலையில் எஞ்சிய ஏடுகளிலேயே வல்லாட்டம் பற்றிய இவ்வளவு குறிப்புகள் இருப்பது வியப்பினைத் தருகின்றது. மேலும் அகழ்வாய்வில் வல்லுக்காய்கள் மட்டுமே கிடைக்க, வல்லுப்பலகை எதுவும் கிடைக்காமலிருப்பதற்கு

இரு காரணங்களிருக்கலாம். முதலாவதாகப் பலகைகள் அகநானூறு 377ஆவது பாடலில் சொன்னது போலக் கறையான் அரித்தோ அல்லது இயற்கையாகக் காலப் போக்கில் அழிந்தோ போயிருக்கலாம், காய்கள் யானைத் தந்தம், சுடுமண், கல் ஆகியவற்றால் செய்யப்பட்டவை என்பதால் அவை தாக்குப் பிடித்திருந்துள்ளன. இரண்டாவதாகத் தரையில் கோடுகள் போட்டுக் கூட சில நேரங்களில் வல்லாட்டம் ஆடப்பட்டிருக்கலாம் (வல்லின் முன்னோடியான ஆடுபுலி ஆட்டமானது இவ்வாறு தரையில் கோடுகள் போடப்பட்டே விளையாடப்பட்டது, இது பற்றிப் பின்னர் பார்ப்போம்).அது ஒரு புறமிருக்க, இலக்கியச் சான்றுகள் மூலம் வல்லுப்பலகையில் வல்லு ஆடப்பட்டதற்கான சான்றுகள் எம்மிடமுள்ளன.

வல்லுப்பலகை, வல்லுக்காய் என்பனவற்றுக்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் இருப்பதனைக் கொண்டு, வல்லாட்டத்துக்குத் தேவையான அடிப்படைகள் எல்லாம் சங்ககாலத்தில் இருந்ததனை நிறுவியாகிவிட்டது. இனி, ஆட்டத்தின் இயல்பு பற்றிப் பார்ப்போம். வல்லாட்டம் என்றாலே உடனே எமக்கு நினைவுக்கு வருவது, அது ஒரு போர் என்பதே!; அதாவது களத்தில் படைகளை நகர்த்திப் போரிடுவது போலப் பலகையில் காய்களை நகர்த்திப் போரிடும் ஓர் ஆட்டமே `வல்லு`. இத்தகைய ஆட்டத்தின் இயல்பினைக் குறிக்கும் ஏதாவது சங்க இலக்கியப்பாடலுள்ளதா? எனத் தேடுவோம்.

**" வல்லுப்போர் வல்லாய்! மலைமேல் மரம்;**
**வட்டுருட்டு வல்லாய் மலைய நெட்டுருட்டுச்**
**சீர் ததும்பும் அரவ முடன்சிறந்து ".**

**: பரிபாடல்**

மேலுள்ள பாடலில் மூன்று வகையான விளையாட்டுகள் அல்லது ஆட்டங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதில் முதலாவதாகக் குறிப்பிடப்படும் வல்லாட்டத்தினைப் பரிபாடல் குறிப்பிடும் போது, `வல்லுப்போர்` என்றே குறிப்பிடப்படுவதனைக் காணலாம். எனவே வல்லாட்டத்தின் இயல்பான `போர்` என்பதனையும் சங்க இலக்கியம் குறிப்பிடுவதனைக் காணலாம். இப் பரிபாடல் பற்றி இந்த நூலின் வேறொரு இடத்தில் விரிவாகப் பார்ப்போம். இப்போதைக்கு வல்லின் இயல்பான `போர்` பற்றிய குறிப்பினைச் சங்க இலக்கியம் பதிவு செய்கின்றது என்பதனைக் குறித்துக் கொள்வோம்.

**'வல்லு' என்ற சொல் இடம் பெறும் இன்னொரு பாடலையும் பார்த்து விடுவோம்.**

**" வல்லினும் வல்லார் ஆயினும் சென்றோர்க்கு**
**சால் அவிழ் நெடும் குழி நிறைய வீசும்"**

**: அகநானூறு 152 : 19-20**

மேலுள்ள பாடலில் குறிஞ்சி பரணர் எனும் புலவர் வல்லில் வல்லவர்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், தம்மிடம் பரிசில் வேண்டி வந்தவர்க்குப் பொருள் வழங்கியதனைக் குறிப்பிடுகின்றார். இப் பாடலின் வழியாக வல்லின் வல்லோர் சங்ககாலத்தில் இருந்தமை தெளிவாகின்றது.

மேலே பட்டியிலிடப்பட்ட பல சான்றுகள் வல்லாட்டம் குறித்துக் காணப்பட்ட போதும், அவை குறித்து உரிய முறையில் பேசாப்படாமைக்கு இப் பாடல்களுக்கு எழுதப்பட்ட உரைகளும் ஒரு காரணமாகும். பழந் தமிழ் நூல்களுக்கான உரைகள் சில வேளைகளில் (சில வேளைகளில் மட்டும்) உரைகளாகவல்லாமல், `உறைகள்` ஆக மாறி மூலத்தினையே மறைத்துவிடுகின்றன. அவ்வாறு சில வேளைகளில் அமைந்த உறைகளில் ஒன்றாக அமைந்த உரையாகவே வல்லுஎன்பதற்கானஉரைவிளக்கமும்கடந்தகாலத்தில்அமைந்துள்ளது; அதாவது வல்லு என்றாலே சூதாட்டம் அல்லது தாயம் என்ற பொருளிலேயே உரை எழுதி விட்டார்கள், அத்தகைய உரை விளக்கம் ஏன் பிழை எனப் பார்ப்போம்.

♦♦♦

# வல்லு என்பது சூதாட்டம் / தாயம் என்ற தவறான கருத்து :–

`வல்லு`எனச் சங்ககாலப் பாடல்களில் வரும் போதெல்லாம், அச் சொல்லுக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் பொருள் எழுதிய உரையாசிரியர்கள் சிலர் சூதாட்டம் எனப் பொருள் கூறி விட்டார்கள். இங்கு சூதாட்டம் என்றால் என்ன எனப் பார்ப்போம். சூதாட்டம் (Gambling) என்பது, பணம் அல்லது வேறு பெறுமதியான பொருளைப் பணயமாக வைத்து ஆடுகின்ற, உறுதியமற்ற விளைவைக் கொடுக்கக்கூடிய ஒரு வகையான ஆட்டமாகும் . இதற்கெனத் தனியாகச் சில ஆட்டங்களுள்ள போதும், எந்தவொரு ஆட்டத்திலும் அல்லது விளையாட்டிலும் பணத்துக்காக விளையாடும் போது, அது சூதாட்டமாகி விடுகின்றது. காட்டாக மட்டைப் பந்தாட்டம் (கிரிக்கெற்) சூதாட்டமாக மாறியதனைப் பல இடங்களில் செய்திகளாகக் காண்கின்றோம், அதற்காக அந்த விளையாட்டே சூதாட்டமாகிவிடுமா? இல்லையே. அது போலவே வல்லாட்டத்திலும் பணம் அல்லது பொருள் வைத்து ஆடினால் அது சூதாட்டமே! அதற்காக `வல்லு` என்று வருமிடங்களில் எல்லாம் `சூது` எனப் பொருள் கொள்ளக்கூடாது. பணத்துக்காக வல்லு, சூதாக ஆடப்பட்டதற்கான சான்றுகள் தமிழரிடையே காணக்கிடைக்கவில்லை. சூத்ரகிருதங்கம் (Sutrakritanga) என்ற பாளி மொழியிலான சமண நூலானது `அஷ்டாத` (Ashtada , சதுரங்கம் போன்ற மற்றொரு பெயர் ) என்ற ஆட்டத்தினைத் தடை செய்தனைக் குறிப்பிடுவதாக முர்ரே எழுதிய நூல் சொல்லுகின்றது ( A History of Chess). அதே போன்று அராபியர்களால் இந்த ஆட்டமானது பாரசீகத்துக்கு எடுத்துச் சென்ற பின்னர், அங்கும் ஒரு முறை இந்த ஆட்டமானது தடை செய்யப்பட்டதாக முர்ரே கூறுகின்றார். இவ்விரு வேளைகளிலும் பொருளினைப் பணயமாக வைத்து ஆடப்பட்டமையாலேயே இந்தாட்டம் தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றினை வைத்துத்தான் வல்லினைச் சூதாட்டமாகக் கருதினரா! அல்லது தமிழர்களிடையேயும் சூதாக ஆடப்பட்டதா என்ற தெளிவில்லை. அது எவ்வாறிருப்பினும் வல்லு

என்றாலே சூது எனப் பொருள் கொள்வது தவறானது.

வல்லு என்றால் தாயம் அல்லது பகடைகளை உருட்டி ஆடுவது என்றொரு பிழையான விளக்கமுண்டு. இங்கும் அஷ்டபதி அல்லது சதுர்ஜி (Chaturaji) எனும் ஒரு வகையான வட இந்தியா ஆட்டத்தின் வழியே சிந்தித்தனூடாக ஏற்பட்ட குழப்பமே இதற்குக் காரணம் என எண்ணுகின்றேன். `அல் பிரூனி` என்பவர் 1030ஆம் ஆண்டளவில் எழுதிய இந்தியா என்ற பொத்தகத்தில் ( `India` by Al-Biruni) இந்த ஆட்டம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். முர்ரே தனது நூலில் இந்தாட்டம் பற்றி விளக்கும் போது, பகடைகளை உருட்டி அதற்கேற்ப காய்களை நகர்த்திய செய்தியினைச் சொல்லுகின்றார். சதுர்ஜி (Chaturaji) என்ற ஆட்டமானது மூளையினாலன்றி, ஆகூளினடிப்படையில் முடிவு தீர்மானிக்கப்படுவது (game of chance). இத்தகைய சதுர்ஜி ஆட்டத்தின் வழி நோக்கியதால் வல்லினைத் தாயத்துடன் தொடர்புபடுத்தினார்களா? எனத் தெரியவில்லை, ஆனால் எமது சங்க இலக்கியங்கள் கூறும் வல்லு என்பது சதுர்ஜியிலிருந்து வேறுபட்டது என்பதனைத் தெளிவாகவே சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

`காய் நகர்த்துதல்` என்ற சொல்லாடலை எளிய மக்கள் கூடப் பயன்படுத்துவதனைக் காணலாம். இந்தக் காய் நகர்த்துதல் என்ற சொல்லாடல் மூளையினால் மேற்கொள்ளப்படும் நகர்வினையே குறிக்கும். வல்லாட்டத்தில் நகர்த்தப்படும் காய்களின் வழி வந்த சொல்லாடலே இதுவாகும். இதன் மூலம் வல்லாட்டமானது திறமையால் விளையாடப்படும் ஆட்டமேயன்றி, ஆகூளினடிப்படையிலான ஆட்டமல்ல என்பது தெளிவாகின்றது (Game of skill and not the game of chance).

வல்லாட்டமானது தாயத்திலிருந்து வேறுபட்டது என்பதனைப் பின்வரும் சங்க இலக்கியப் பாடல் தெளிவாகக் காட்டுகின்றது.

**" வல்லுப்போர் வல்லாய்! மலைமேல் மரம்;**
**வட்டுருட்டு வல்லாய் மலைய நெட்டுருட்டுச்**
**சீர் ததும்பும் அரவ முடன்சிறந்து ".**

**: பரிபாடல்**

இப் பாடலில் மூன்று வகையான ஆட்டங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக ஏற்கனவே நாம் பார்த்த வல்லு (`வல்லுப்போர்` எனக்) குறிப்பிடப்படுகின்றது. இரண்டாவதாகச் சொல்லப்படும் `மலை மேல் மரம்` என்பது தாயம் எனும் ஆட்டத்தின் ஒரு நிலையாகும். இத் தாயம் எனும் ஆட்டத்தில் `மனை` என்ற நிலை புள்ளடி மூலம் காட்டப்படும்.

காயானது பழமாக மாறுவதற்காக நகர்த்தப்படும் போது இந்த `மனை` என்ற இடத்தில் காயானது இருந்தால் அதனை மற்றவர்களால் வெட்ட முடியாது. இத்தகைய பாதுகாப்பான நிலையினையே `மலை மேல் மரம்` என்று சொல்வர் (தாயத்தில் மனை என்பதனை மலை எனவும் குறிப்பிடுவர்) . எனவே இங்கு இரண்டாவதாகத் தாயம் என்பது வல்லு என்பதிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படுவதன் மூலம் இவையிரண்டும் வெவ்வாறான ஆட்டங்கள் என்பது தெளிவாகின்றது. பாடலில் மூன்றவதாகக் குறிப்பிடப்படுவது `வட்டுருட்டு ` என்ற விளையாட்டாகும். இப் பரிபாடலில் வல்லு, தாயம், வட்டுருட்டு ஆகிய மூன்றும் வெவ்வாறாகக் காட்டப்படுவதிலிருந்து, வல்லாட்டம் என்பது தாயமல்ல என்பது தெளிவாகின்றது.

**அகழ்வாய்வுச் சான்றுகளில் கிடைத்த வல்லுக்காய்களின் வடிவமானது வல்லாட்டம் என்பது தாயம் அல்லது பகடை உருட்டுதல் என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதனையும் அது 'செஸ்' ஆட்டத்தின் காய்களை ஒத்திருப்பதனையும் தெளிவாகக் காட்டும் .**

♦♦♦

# வல்லாட்டத்துக்கான அகழ்வாய்வுச் சான்றுகள் :–

தமிழ் நாட்டில் வல்லாட்டம் இருந்தமைக்கான அகழ்வாய்வுச் சான்றுகள் கீழடியில் கிடைத்துள்ளன. தமிழ்நாடு அரசு அதிகார முறையில் வெளியிட்ட `கீழடி 4` கையேட்டின் 14ஆம் பக்கத்தின் ஒரு பகுதியினைக் கீழே படமாகக் காண்க.

தமிழ்நாடு அரசானது மேலுள்ள படத்தில் `80 சதுரங்கக் காய்கள் கிடைத்துள்ளன` எனக் குறிப்பிட்டுள்ளமையினைக் காண்க; எனவே தமிழ்நாட்டில் வல்லுக்காய்கள் கீழடி அகழ்வாய்விலேயே கிடைத்துள்ளன என்பது இதன் மூலம் உறுதியாகின்றது. கீழடி அகழ்வாய்வில் கிடைத்த இந்த வல்லுக்காய்கள் கீழடி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கீழடியில் கிடைத்த மேலுள்ள அகழ்வாய்வுச் சான்றுகள் சங்ககாலத்தினைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.




திறமையை வெளிப்படுத்தும் வகையில் விளையாடும் சதுரங்க விளையாட்டிற்கு பயன்படும் பல்வேறு அளவிலான 80 சதுரங்கக் காய்கள் கிடைத்துள்ளன.

கீழடியில் அதிக அளவில் கிடைத்துள்ள இந்தத்தொல்பொருட்கள் சங்க காலத்தில் ஆண், பெண், சிறுவர்கள் விளையாட்டினை கண் முன்னே படம்பிடித்துக் காட்டுகின்றன.

ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்விலும் வல்லுக்காய்கள் கிடைத்துள்ளன. `ஆட்டக்காய்கள்` என்றே குறிப்பிடப்பட்டாலும் கீழடியில் கிடைத்த வல்லுக்காய்களுடன் ஒப்பிட்டு ஒற்றுமையினை அறியலாம்.

ஆதிச்ச நல்லூரில் கிடைத்த மேலுள்ள காய்களின் காலம் பொ.ஆ.




கீழடி அருங்காட்சியகக் காட்சிப்படுத்தல்

முந்திய 8ஆம் நூற்றாண்டினைச்(BCE 800) சேர்ந்தவை எனக் கணிக்கப்படுகின்றது.


அதே போன்று தமிழ்நாட்டிலிள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தினைச் சேர்ந்த போளுவாம்பட்டி என்ற ஊரில் நடைபெற்ற அகழ்வாய்விலும் வல்லுக்காய்கள் கிடைத்துள்ளன.



ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்வு

போளுவாம்பட்டி அகழ்வாய்வில் கிடைத்த காய்களின் காலம் பொது ஆண்டு முதலாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை ( CE 1st century ) எனக் கணிக்கப்படுகின்றது.


மேலே குறிப்பிடப்பட்ட அகழ்வாய்வுச் சான்றுகள் யாவும் குப்தர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டவை என்பது இங்கு



போளுவாம்பட்டி அகழ்வாய்வு

அழுத்திக் குறிப்பிடப்பட வேண்டும். அதே போன்று மேலுள்ள காய்களின் வடிவங்களுக்கும் தாயம் அல்லது பகடை ஆட்டத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

இங்கு சிலருக்கு இன்றைய `செஸ்` காய்கள் மேலுள்ள அகழ்வாய்வுச் சான்றுகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றதே! என்ற குழப்பம் வரலாம். ஏற்கனவே இந்த நூலில் கூறியபடி, பல்வேறு வடிவங்களில் காய்களானது படிமலர்ச்சியடைந்தே காலப் போக்கில் இன்றைய நிலையினை அடைந்துள்ளது. 1849 ஆம் ஆண்டிலேயே செந்தரப்படுத்தப்பட்டு வல்லுக்காய்கள் இன்றைய வடிவினை அடைந்தன. அதற்கு முன் பல்வேறுபட்ட வடிவங்களிலேயே காய்கள்



வேறுபட்டுக் காணப்பட்டன. காட்டாக ஈரான் நாட்டுப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட 12ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஆட்டக்காய்களைக் கீழே படத்தில் காண்க ( Shatranj என்ற பெயரில் அழைக்கப்பட்ட வல்லுக்காய்கள்).

மேலுள்ள படத்திலுள்ள காய்களுடன் அதற்குப் பல நூற்றாண்டுகள் காலத்தினால் முந்திய கீழடி அகழ்வாய்வில் கிடைத்த வல்லுக்காய்கள் பெருமளவுக்கு ஒத்துப்போவதனைக் காணலாம்.

இந்த நூலின் இதுவரையான பகுதிகளில் வல்லாட்டமானது சங்ககாலத்திலேயே இருந்தமைக்கான பின்வரும் சான்றுகளைக் காட்டியுள்ளோம்.


- **அகழ்வாய்வுச் சான்றுகள்**
- **சங்க இலக்கியச் சான்றுகள்**
- **இலக்கண நூல் (தொல்காப்பியச்) சான்றுகள்.**

வல்லாட்டமானது குப்தர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் முன்னரே தமிழர் நிலத்தில் காணக் கிடைப்பதனை நிறுவி விட்டோம். இனி, வல்லுத் தோன்றுவதற்கு முன்னோடியாக அமைந்த சில ஆட்டங்களைப் பார்ப்போம்.

♦♦♦

# ஆடு புலி ஆட்டம் :–

வல்லாட்டத்தின் முன்னோடியாகவிருந்த ஆடு புலி ஆட்டம் என்பது தரையில் கோடுகள் வரையப்பட்டு, ஆடுகளையும் புலிகளையும் வைத்து விளையாடப்படும் ஒரு வகையான ஆட்டமாகும். ஆடு புலியாட்டத்தினைப் பார்ப்பதற்கு முன், அதற்கும் முன்னோடியாகவிருந்த கட்டரங்கு ஆட்டம் அல்லது கட்டாட்டம் என்பதைப் பார்ப்போம். இத்தகைய கட்டாட்டம் பற்றித் `தமிழர் நாட்டு விளையாட்டுகள்` என்ற நூலில் இரா.பாலசுப்பிரமணியம் என்பவர் படங்களுடன் விளக்கியுள்ளார். அவற்றினைச் சுருக்கமாகப் பார்ப்போம்.




● காய் வைப்பதற்கான புள்ளி.

இந்த ஆட்டத்தில் இருவர் ஒருவருக்கொருவர் எதிராக இருந்து, மூன்று மூன்று காய்களை வைத்துக் கொண்டு ஆடுவர். முதலில் காய் வைப்பதற்கான புள்ளியில் ஒருவர் காயினை வைக்க, அடுத்தவர் மற்றொரு புள்ளியில் காயினை வைக்க, இவ்வாறு மாறி மாறி ஆறு புள்ளிகளில் ஆறு காய்களையும் வைப்பர். பின்னர் முதலில் காயினை வைத்தவர் வெறுமையாக உள்ள ஒரு புள்ளிக்குத் தனது காயினை நகர்த்த, அவ்வாறே மற்றையவர் தனது காயினை நகர்த்த, ஆட்டம் சூடு பிடிக்கும். எப்போது ஒருவர் தனது மூன்று காய்களையும் ஒரே

வரிசைக்குக் கொண்டு வருகின்றாரோ, அப்போது அவர் வெற்றி பெற்றதாகக் கருதப்படுவர் . இவ்வாறு ஒரு வரிசைக்கு மூன்று காய்களையும் நகர்த்துதல் `அடி` எனப்படும்.

**இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாகப் பின்வரும் கட்டாட்டம் காணப்படும்.**

கட்ட விளையாட்டு–2




இரண்டாவது கட்டாட்டத்தில் மூலைக்கோடுகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இங்கு மூலைக்கோடுகள் வழியாகவும் காய்களை நகர்த்தி நடுப்புள்ளிக்குக் கொண்டு வர முடியும். இங்கும் `அடி` (வரிசையாக மூன்று காய்கள்) பெற்றால் வெற்றி கிடைக்கும்.


**இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக நான்கு காய்களை வைத்து ஆடப்படும் `கட்டாட்டம்` காணப்படும்.**



இங்கு நான்கு நான்காக எட்டுக்காய்கள் வைக்கப்பட , மிகுதி எட்டுப் புள்ளிகள் வெறுமையாக இருக்கும். தனது நான்கு காய்களையும் ஒருவர் வரிசைக்குக் கொண்டு வந்தால் , அவர்வெற்றி பெறுவார். இங்கு தனது படைகளை (காய்களை) ஒரு வகையான ஒருங்கிணைப்புடன் நகர்த்த வேண்டும், அதே வேளை எதிரியின் படைகளைச் சிதறடிக்கக்

கூடியதாகவும் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். இங்கு ஒரு வகையான படை நகர்வினூடாக ஒரு போர் தொடர்பான கருத்துருவாக்கம் தோற்றம் பெற்றிருப்பதனைக் காணலாம். இன்றைய செஸ் விளையாட்டில் `Battery formation` என்றொரு நுட்பமுண்டு, அந்த நுட்பமே இங்கு ஒரே வரிசைக்குக் காய்களை நகர்த்தும் `அடி` என்ற நுட்பமும் ஆகும் (எனவே Battery என்பதற்கான தமிழ்ச்சொல்லாக `அடி` என்பதனைப் பயன்படுத்தலாம்). முற்றுகையினை எவ்வாறு மேற்கொள்வது அல்லது முற்றுகையினை எவ்வாறு உடைப்பது என்ற நுட்பத்தினை இங்கு காணலாம்.

இத்தகைய கட்டாட்டங்களின் வழி வந்த ஓர் ஆட்டமாகவே `ஆடு புலி ஆட்டம்` காணப்படுகின்றது. பாறை அல்லது திண்ணை அல்லது தரையில் கோடுகள் போடப்பட்டு, முக்கோணக் கூம்புக் கோடு வடிவம் அமைக்கப்படும், கூம்பின் உச்சியிலிருந்து அடிக்கோட்டை உள்ளே தொடும் மேலும் இரண்டு கோடுகள் வரையப்படும், இந்தக் கோடுகளை வெட்டும்படி போட்ட 3 கிடைக்கோடுகள் அமைக்கப்படும், கிடைக்கோடுகளின் முனைகள் இருபுறமும் குத்துக் கோடுகளால் இணைக்கப்பட்டிருக்கும். இவ்வாறுதான் ஆடு புலி ஆட்டத்துங்கான கட்டரங்கு உருவாக்கப்படும். இருவர் ஒருவரையொருவர் எதிர்த்து ஆடுவார்கள். ஆடுகள் என்னும் பெயரில் 15 சிறு காய்கள் ஒருவரிடமும், புலி என்னும் பெயரில் 3 சற்றே பெரிய காய்கள் மற்றொருவரிடமும் இருக்கும்.



புலிக்காய்கள் உச்சியில் ஒன்றும் அடுத்த சந்திகளில் இரண்டுமாக முதலில் வைக்கப்பட்டிருக்கும். ஆடுகள் ஒவ்வொன்றாகச் சந்திகளில் வைக்கப்படும். ஒரு ஆடு இறங்கியதும் புலி அடுத்த சந்திக்கு நகரும். நகரும்போது அடுத்த சந்தியில் ஆடு இருந்து அடுத்த நேர்த்திசைச் சந்தி காலியாக இருந்தால் புலியை வெட்டிவிட்டுத் தாவும். எல்லா ஆட்டுக் காய்களும் வைக்கப்பட்ட பின்பு ஆடுகளும் நகரும். ஆடுகளை வைத்துப் புலி பாயாமல் தடுத்தால் புலி கட்டம் கட்டப்பட்டதாகச் சொல்லி, ஆடுகளை நகர்த்தியவர் வெற்றி பெற்றதாகக் கருதப்படுவார்; மாறாக ஆடுகள் வெட்டப்பட்டு புலியினை அடைக்க முடியாமல் போனால் புலிகளை நகர்த்தியவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார். ஐந்து ஆடுகளை வெட்டினாலே போதும், அதற்குப் பின் புலிகளை அடைக்க முடியாது.

வேடுவச் சமூகமானது கால் நடை வளர்ப்புச் சமூகமாக மாறிய போது தோன்றிய ஒரு ஆட்டமே `ஆடு புலி ஆட்டம்` என அறிஞர் தொ.ப கூறுகின்றார். பேராசிரியர் தொ. பரமசிவன் அவர்கள் தனது `பண்பாட்டு அசைவுகள்` என்ற நூலில் பின்வருமாறு கூறுவார்.

*" புலிகளும் ஆடுகளும் கொண்ட ஆடு புலி ஆட்டம் கால்நடை வளர்ப்புச் சமூகத்திலிருந்து பிறந்த ஆட்டமாக இருக்க வேண்டும். புலி திரியும் காடுகளில் ஆடுகளைக் காப்பாற்ற முற்பட்டவனின் முயற்சி இது. அரசு இயந்திரம் மிகப்பெரிய வளர்ச்சியினைப் பெற்ற பிறகு பிறந்த மற்றொரு ஆட்டம் சதுரங்கம். அரசன், மதகுரு, குதிரை வீரன், யானை எனப் போர்ப் பயிற்சிக்கான விளையாட்டாக அது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாட்டு மன்னர்களும் இதனை ஆடியிருக்கிறார்கள். 'ராஜாக்கள் ஆனைக்கொப்பு ஆடுவாரைப்போல' என்கிறது திருவாய்மொழியின் நம்பிள்ளை ஈட்டு உரை. சதுரங்கம் என்பதனை ஆனைக்கொப்பு என்ற சொல்லால் அக்காலத் தமிழ் மக்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது."*

**: பேராசிரியர் தொ. பரமசிவன் (பண்பாட்டு அசைவுகள் )**

இந்த ஆடு புலி ஆட்டத்தில் புலியாக ஆடுபவர் தனது புலிக் காய்களை மேலே வைத்திருப்பது பாதுகாப்பானது, ஆடுகளை வெட்டக் கீழிறங்கும் போது, மேலுள்ள புள்ளிகள் ஆடுகளால் அடைக்கப்பட்டால், புலி கட்டம் கட்டப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்( ஆடுகள் வைக்கப்படும் போது உச்சியில் வைக்க முடியாது,

எல்லா ஆடுகளும் வைக்கப்பட்ட பின்பு நகர்ந்து உச்சிக்குச் செல்ல முடியும்). அதற்காகப் புலிகளை எப்போதும் மேலேயே வைத்திருக்க வேண்டும் என்பதல்ல, மாறாகக் காய் நகர்த்தலில் கணிப்புகள் துல்லியமாக இருக்க வேண்டும்.

இந்தாட்டத்தில் பயன்படுத்தப்படும் `கட்டம் கட்டுதல்`, `காய் நகர்த்துதல்` ஆகிய சொல்லாடல்கள் இன்றும் மக்களின் வாழ்வியலில் பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். ஆடு புலி ஆட்டத்தினை `பதினைந்தாம் புலி` எனவும் அழைப்பர், அதாவது 15 ஆடுகள் என்பதிலுள்ள எண்ணிக்கையினையும் புலி என்ற காய் வகையினைச் சேர்த்தும் இப் பெயர் அமைந்துள்ளது. `குழை எடு` என்று மனிதர்கள் ஆடும் ஒரு வகை ஆட்டமும் ஆடு புலி ஆட்டம் என்ற பெயரிலுண்டு. அது ஒரு விளையாட்டு, காய்களை நகர்த்தி ஆடுவது ஆட்டம் வேறுபட்டது . ஆட்டம் பற்றியே இந்த நூல் பேசுகின்றது. இந்த ஆட்டத்தினையும் சிலர் `குழை எடு` ஆட்டம் என்பர்.

**சங்க இலக்கியமான நற்றிணையில் (நற்றிணை 341 இல்) ஆடு புலி ஆட்டம் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.**

**'வங்கா வரி பறை சிறு பாடு முணையின்**
**செம் பொறி அரக்கின் வட்டு நா வடிக்கும்**
**விளையாடு இன் நகை அழுங்கா பால் மடுத்து'**

**: நற்றிணை 341: 1-3**

இப் பாடலின் பொருளாக "பாறையில் வங்கம் போன்ற உருவத்தில் கோடுகளை வரைந்துகொண்டு ஆடுவர், பின்னர் இந்த ஆட்டத்தில் வெறுப்புத் தோன்றினால், அரங்கத்தில் விளையாடுவர்" எனவும் சொல்லப்படுகின்றது. இங்கு முதலில் ஆடு புலி ஆட்டம் ஆடிய பின் `வட்டு நா` விளையாடும் செய்தி சொல்லப்படுகின்றது (இப் பாடலில் பாட பேதங்களுண்டு). இந்த ஆட்டத்தினைச் 'சிறுபாடு' என்று பாடலில் சொல்லப்படுவதனைக் காணலாம். இந்த ஆட்டத்துக்கு உடலுழைப்புச் சிறியளவிலேயே தேவைப்படுவதால் இத்தகைய ஆட்டங்களைச் `சிறுபாடு` என அழைக்கின்றனர் (`பெரும்பாடு` என்பதன் எதிர்ச்சொல்லே `சிறுபாடு`).

ஆடு புலி ஆட்டத்துக்கான இலக்கியச் சான்றுகளை விட கல்வெட்டுச் சான்றுகளுமுண்டு. பொ.ஆ.முந்திய முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ( BCE 1st century ) கொங்கபட்டி (உசிலை-மதுரை ) தமிழிக் கல்வெட்டில் வரையப்பட்டுள்ள கட்டங்கள் ஆடு புலி ஆட்டத்துக்கான கட்டங்களாகவுள்ளன .



மாமல்லபுரத்திலுள்ள வெண்ணை உருண்டைக் கல்லின் அடியிலும் ஆடு புலி ஆட்டத்துக்கான கோடுகள் வரையப்பட்டிருப்பதும், இதன் காலம் ஆகக் குறைந்தது ஆயிரமாண்டுகளாவது இருக்கும் எனவும் அக் கல் அங்கு கொண்டு வருவதற்கு முந்தியே வரையப்பட்டுள்ள கோடுகள் அவை எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

தமிழரின் மரபுசார்ந்த இந்த ஆட்டமானது மூளைத் திறனை அதிகரிப்பதுடன்,எதிர்வுகூறல் : ( Forecasting ), ஆக்கத் திறன் (Creativity ) என்பவற்றினையும் வளர்க்கும். அத்துடன் வல்லாட்டத்துக்கான முன்னோடியாக இது காணப்படுவதால் `வல்லு` ( Chess ) ஆடும் திறனையும் அதிகரிக்கும். இன்றும் ஆடு புலி ஆட்டம் ஊர்ப் புறங்களில் ஆடப்படுகின்றது. இந்த ஆட்டத்தினை அறிந்த பின்பே, நான் வல்லாட்டம் ஆடப் பழகினேன். ஆடு புலி ஆட்டத்தில் கிடைத்த பட்டறிவு, நுட்பங்கள் என்பன எனக்கு வல்லாட்டத்தில் துணைகொடுத்தமை குறிப்பிடத்தக்கது. எனவே தமிழரின் மரபு சார்ந்த ஆடு புலியாட்டத்தினை அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்த வேண்டிய தேவையுள்ளது.

மேலே நாம் பார்த்த கட்டாட்டம், ஆடு புலியாட்டம் என்பவற்றின் வழி வந்ததே வல்லாட்டம். அதற்காக `வல்லு` ஆடப்படத் தொடங்கிய

பின்பு கட்டாட்டம், ஆடு புலியாட்டம் என்பன வழக்கில் இல்லாமல் போய்விட்டன என்பது பொருளல்ல, இன்றும் ஆடு புலியாட்டம் அரிதாகவேனும் ஆடப்பட்டு வருகின்றது.

வல்லாட்டமானது ஆடு புலியாட்டத்திலிருந்து மேலும் மேம்பட்ட வடிவில் போரினைச் சார்புபடுத்தும் வகையிலுள்ளது. இதற்கான அடிப்படைகள், அதாவது நான்கு வகையான படையணிகள் போன்ற கூறுகள் தமிழரிடையே சங்ககாலத்தில் இருந்தனவா எனப் பார்ப்போம்.

♦♦♦



# சங்ககாலத்தில் காணப்பட்ட நாற்படை

வல்லாட்டம் சங்ககால மக்களிடையே காணப்பட்டது எனில் அப்போதே அவர்களிடம் நான்கு வகையான படையினரும் காணப்பட்டிருக்க வேண்டும். அவர்களது வாழ்வியலில் நாற்படையினர் இருந்திருந்தாலே அவர்கள் அதனை ஆட்டத்தில் கொண்டு வந்திருக்க முடியும். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை ஆகிய நான்கு வகையான படையினரையே நாற்படை என்போம். காலாட்படைதான் படையினரின் தொடக்கப் புள்ளி, வேறொரு படைப்பிரிவு இருக்கின்றது என்றாலே காலாட்படையும் இருக்கின்றது என்பதே பொருள். இன்னமும் சொன்னால் அரசுகளின் தோற்றத்துக்கு முற்பட்ட இனக்குழு வாழ்க்கை முறையிலேயே காலாட்படை தோன்றியிருக்கும். சங்க காலத்தில் காலாட்படை இருந்தமைக்குச் சான்றாகப் பின்வரும் குறளினைக் காட்ட முடியும்.

**“தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த**
**போர்தாங்கும் தன்மை அறிந்து”**

**(அதிகாரம்:படைமாட்சி குறள் எண்:767)**

இக் குறளில் ஒரு வகையான தரைப்படையினையே (தூசுப் படையினையே) வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறான எண்ணற்ற தரவுகளை சங்ககாலத் தரைப்படையினைச் சான்றுப்படுத்த அடுக்க முடியும்.

அடுத்த படைப் பிரிவான குதிரைப்படையினரைப் பார்ப்போம். குதிரை என்பது தமிழர் நிலப்பகுதிக்குரிய இயல்பான ஆதி விலங்கல்ல, எனினும் சங்க காலத்திலேயே குதிரைகள் தமிழர் நிலப்பகுதிக்கு இறக்குமதியாகிவிட்டன. இதன் மூலம் சங்ககாலத்திலேயே குதிரைப்படையும் தமிழரிடையே உருவாகியிருந்தது. பின்வரும் சங்க இலக்கியப் பாடலினைப் பாருங்கள்.

**“ மா வாராதே மா வாராதே**
**எல்லார் மாவும் வந்தன எம் இல்**
**புல் உளை குடுமி புதல்வன் தந்த**
**செல்வன் ஊரும் மா வாராதே**

**இரு பேர் யாற்ற ஒரு பெரும் கூடல்**
**விலங்கு இடு பெரு மரம் போல**
**உலந்தன்று-கொல் அவன் மலைந்த மாவே"**

**: புறநானூறு 273:1-7**

பொருள் : குதிரை வரவில்லையே! குதிரை வரவில்லையே!

மற்ற வீரர்கள் அனைவருடைய குதிரைகளும் வந்தன. எம் வீட்டில் உள்ள

சிறிதளவே குடுமியுள்ள இளமகனைத் தந்த

என் கணவன் ஏறிச்சென்ற குதிரை வரவில்லையே!

இரண்டு பெரிய ஆறுகள் கூடும் பெரிய சந்திப்பில்

குறுக்கே நின்ற பெருமரம் போல்,

அவன் ஏறிச்சென்று போரிட்ட குதிரை சாய்ந்ததோ?

மேலுள்ள பாடலில் குதிரைவீரர்களை ஏற்றிச் சென்ற குதிரைகள் ஒவ்வொன்றாக வருகின்ற செய்தியினைக் காண்க, இதன் மூலம் குதிரைப்படை சங்ககாலத்தில் இருந்த செய்தி உறுதியாகின்றது. இவுளி என்ற பெயரிலும் குதிரையானது சங்கப்பாடல்களில் குறிப்பிடப்படுகின்றது (அகநானூறு 224:5 , புறநானூறு 197:1). `மா` என்ற பெயரிலும் குதிரையினைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன ( புறநானூறு 273, சிறுபாணாற்றுப்படை 259). பின்வரும் திருக்குறளும் குதிரைப்படை இருந்தமைக்கான சான்றாக அமையும்.

**"அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை"**

**(அதிகாரம்:தீ நட்பு குறள் எண்:814)**

பொருள் - போர் வந்தபோது களத்தில் தள்ளிவிட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போன்றவரின் உறவைவிட, ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருத்தலே சிறந்தது.

இலக்கியச் சான்றுகள் மட்டுமல்லாது அகழ்வாய்வுச் சான்றுகளும் சங்ககாலக் குதிரைப்படைக்குச் சான்றாகவுண்டு. கீழடி அகழ்வாய்வில் கிடைத்த குதிரை எலும்புகளை அகழ்வுச் சான்றாகக் கொள்ள முடியும். எனவே மேற்கூறிய சான்றுகள் மூலம் சங்ககாலத்தில் குதிரைப்படை இருந்ததும் ஐயத்துக்கு இடமின்றி உறுதியாகின்றது.

அடுத்ததாகத் தேர்ப்படையினைப் பார்ப்போம். `தேரோர் வென்ற கோமான் முன்தேர்க் குரவையும் ` என்ற தொல்காப்பிய வரியானது (புறத்திணையியல் 17) தேர்ப்படைக்கான சான்றாகவுள்ளது. ஐங்குறுநூறு எனும் சங்க இலக்கியப்பாடலும் தேர்ப்படைக்குச் சான்றாக அமையும்.

**"நுண் புரி வண் கயிறு இயக்கி நின்**
**வண் பரி நெடும் தேர் கடவு-மதி விரைந்தே"**

**: ஐங்குறுநூறு 489 : 4-5**

பொருள்- நுண்ணிய புரிகளைக் கொண்ட தடித்த கயிறுகளைச் சுண்டிவிட்டு, உன் வளமையான குதிரைகள் பூட்டிய நெடிய தேரினைச் செலுத்துவாயாக, விரைந்து.

அடுத்ததாக யானைப்படையினைப் பார்ப்போம். பின்வரும் குறளானது யானைப்படை இருந்தமைக்குச் சான்றாகவுள்ளது.

**"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று**
**உண்டாகச் செய்வான் வினை"**

**(அதிகாரம்:பொருள்செயல்வகை குறள் எண்:758)**

**பொருள் - தன் கைப்பொருள் ஒன்று தன்னிடம் இருக்க அதைக் கொண்டு ஒருவன் செயல் செய்தல், மலையின்மேல் ஏறி, யானைப் போரைக் கண்டாற் போன்றது.**

சங்க இலக்கியத்தில் யானைப்படைக்கான சான்றாகப் பின்வரும் பாடலினைக் காணலாம்.

**"கடும் பகட்டு யானை நெடுமான்_அஞ்சி**
**ஈர நெஞ்சமோடு இசை சேண் விளங்க"**

**: நற்றிணை 381: 7-8**


பொருள் - மிகுந்த பெருமிதத்தையும் கொண்ட யானைப் படையையுடைய நெடுமான் அஞ்சி இரக்கமுள்ள நெஞ்சத்தோடு, தனது புகழ் நெடுந்தொலைவுக்கு விளங்க

களிறு, புகர்முகம், கயவாய், பிடி, வேழம், கைம்மா(ன்), ஒருத்தல், கயமுனி, கோட்டுமா, கயந்தலை, கயமா, பொங்கடி, பிணிமுகம், மதமா, தோல், கறையடி, உம்பல், வாரணம், நாகம், பூட்கை, குஞ்சரம், கரி முதலான 23 வகையான பெயர்களில் சங்க இலக்கியங்கள் யானையினைப் பதிவு செய்துள்ளன என்பதிலிருந்தே யானை சங்ககாலத்தில் பெற்றிருந்த முதன்மையினை நாம் அறிந்து கொள்ளலாம். `வல்யானை` என்று போரில் ஈடுபடும் யானைகளைக்

குறிக்கும் மரபு ஒன்றும் பழந்தமிழரிடமுண்டு. இலங்கையின் உருகுணை என்ற இடத்தில் கிடைத்த `வல்யானை` என்ற வல்லாட்டக்காயினைக் கீழே படத்தில் காண்க.




**பொது ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியினைச் சேர்ந்தவை எனக் கருதப்படும் வல்யானை உட்பட கறுப்புச் சிவப்பு வல்லாட்டக் காய்களைக் கீழே படத்தில் காண்க . விழுப்புரம் தென்பெண்ணை ஆற்றங்கரையோர அகழ்வாய்வில் இவை கிடைத்திருந்தன.**



யானைக் காயின் இன்னொரு முதன்மை என்னவெனில் இந்தாட்டத்தின் மூலத்துக்கு இந்தியா உரிமை கோருவது போன்றே பிற சில நாடுகளும் உரிமை கோருகின்றன ; எனினும் உலகப் பொது ஏற்பாக இந்தியா இந்தாட்டத்துக்கான பிறப்பிடம் என அடையாளம் காட்டப்படுவதற்கு இந்த யானைக் காய்களே பெரிதும் காரணம். சத்ரஞ்ச் ( Shatranj ) என்ற பெயரில் பாரசீகத்தில் இருந்த செஸ் விளையாட்டே ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த சத்ரஞ்ச் ( Shatranj ) ஆட்டத்தில் `அல்பில்` (Alfil / Alpil) ) எனும் காயானது யானையினைச் சார்புபடுத்தியதே. இதனூடாகவே பாரசீகத்துக்கு இந்தியா மூலமே யானைக்காய் வந்தது என்பதனை வரலாற்றாளர் உறுதிப்படுத்தினர். யானை சிந்துவெளி நாகரிகத்திலும்,தமிழர் வாழ்வியலிலும் பெற்றிருந்த முதன்மை பலரும் அறிந்ததே!

யானையினைத் தமிழில் `ஆனை` எனவும் அழைப்பர். இந்த வகையில் `ஆனைக்குப்பு` என்றொரு வகையான ஆட்டமும் தமிழரிடமிருந்துள்ளது. நாலாயிரப் பிரபந்த வியாக்கியானத்தில் சில பழ மொழிகளும் கூறப்படுகின்றன, அவற்றிலொன்று வருமாறு அமையும்.

**" மறக்குடி அறஞ்செய்யக் கெடும்**
**கரும்பு தின்னக் கூலி கொடுப்போரைப் போலே.**
**ஆனைக்குப்பு ஆடுவோரைப்போலே அநாதரித்திருந்தான்".**

மேலுள்ள பாடலில் ஆனைக்குப்புப் பற்றிய குறிப்பினைக் காணலாம். இங்கு குறிப்பிடப்படும் `ஆனைக்குப்பு` ஆனது வல்லாட்டத்துக்கான மற்றொரு பெயர் என்ற கருத்துப் பரவலாகவுள்ளது. அதே வேளை `ஆனைக்குப்பு` என்பது குழிக்குள் யானையைத் தள்ளும் ஆட்டம் என்றொரு கருத்துமுள்ளது. அது எவ்வாறாயினும் ஆனையினை (யானைக் காய்களை) நகர்த்தி ஆடப்படும் ஓர் ஆட்டமே `ஆனைக்குப்பு` என்பதில் ஐயமில்லை.

சங்ககாலத்திலேயே நான்கு வகையான படைகளுமிருந்தன என்பதற்கான சான்றுகளை இதுவரை ஒவ்வொரு படையாகப் பார்த்தோம். இப்போது நாற்படையும் ஒருங்கு சேரப் பாடப்படும் ஒரு புறநானூற்றுப் பாடலைப் பார்ப்போம்.

**" கடும் சினத்த கொல் களிறும்**
**கதழ் பரிய கலி_மாவும்**
**நெடும் கொடிய நிமிர் தேரும்**
**நெஞ்சு உடைய புகல் மறவரும் என**
**நான்கு உடன் மாண்டது ஆயினும் மாண்ட"**

:புறநானூறு 55 : 7-11

மேலுள்ள பாடலில் பாண்டிய அரசனான நன்மாறன் நாற்படையினையும் வைத்திருந்த செய்தியினை மதுரை மருதன் இளநாகனார் எனும் புலவர் படம் பிடித்துக் காட்டுகின்றார். எனவே சங்ககாலத்திலேயே தமிழரிடம் நான்கு வகையான படையணிகளும் இருந்துள்ளன என்பது மேற்கூறிய சான்றுகளிலிருந்து தெளிவாகின்றது.

♦♦♦.



# சங்ககால `எண்பேராயம்` – `ஐம்பெருங்குழு`

சங்க காலத்தில் நாற்படையினர் இருந்தமையினை ஏற்கனவே பார்த்தோம். அதே போன்று நாற்படையினை வழி நடாத்திய பாண்டிய அரசனான நன்மாறன் எனும் அரசனையும் புறநானூறு 55ஆவது பாடலில் பார்த்தோம். நன்மாறன் போன்ற பல சங்ககால அரசர்களை இலக்கியச்சான்று, கல்வெட்டுச் சான்றுகள் என்பவற்றினைக் கொண்டு பட்டியலிட முடியும். இதன் மூலம் சங்க காலத்தில் அரசன் இருந்தமையும் தெளிவாகின்றது. வல்லாட்டத்தில் பயன்படுத்தப்படும் இன்னொரு காயான அரசி( Queen ) பற்றி நாம் அக்கறை கொள்ள வேண்டியதில்லை, ஏனெனில் அரசி என்ற காய் பிற்காலத்தில்தான் (ஏறத்தாழ 10ஆம் நூற்றாண்டிலேயே) ஐரோப்பாவில் அறிமுகமாகின்றது. அதற்கு முன் `அரசி` என்ற காயானது அமைச்சர் அல்லது அறிவுரையாளர் ( vizier) என்ற பெயரிலேயே இருந்தது. எனவே நாம் சங்ககாலத்தில் அரசனுக்கு அறிவுரை வழங்கும் அமைச்சர் இருந்தாரா எனப் பார்ப்போம்.

**'படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு'**

**(குறள் 381, பொருட்பால், அரசியல், இறைமாட்சி)**

பொருள் – படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்று கூறப்படும் ஆறு கூறுகளையும் உடையவனே அரசருள் ஏறு போனறவன்.

மேலுள்ள குறளில் அமைச்சர் சங்க காலத்தில் வகித்த முதன்மையான குறிப்புக் காணப்படுகின்றது. `அமைச்சியல்` என்றொரு அதிகாரத்தின் கீழ் பத்துத் திருக்குறள்கள் காணப்படுகின்றன (குறள் 631– குறள் 640).

செங்குட்டவன் அரசவையில் `அழும்பில் வேள்` என்ற பெயரில் ஒரு அமைச்சர் இருந்ததனைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

**"தஞ்செவிப் படுக்குந் தகைமைய வன்றோ**
**அறைபறை யென்றே அழும்பில்வேளுரைப்ப "**

**:காட்சிக் காதை: 176–177, சிலப்பதிகாரம்.**

சேரன் செங்குட்டுவன் அரசவையில் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது (`ஐம் பெருங்குழுவும், எண் பேர் ஆயமும்`. சிலப்பதிகாரம் கால்கோள் காதை). ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் எனும் சங்ககால அரசனின் ஐம்பெருங்குழுவிலுள்ள அந்துவஞ்சாத்தன் என்பவன் பாண்டிய அரசனுக்கு அமைச்சர் போலிருந்த செய்தியினை புறநானூறு 71 ஆவது பாடல் சொல்லுகின்றது.

சங்க காலத்தில் காணப்பட்ட `எண்பேராயம்` பற்றிய செய்தி மேலும் முதன்மையானது. தொல்காப்பியமானது வாகைத் திணையின் முப்பது துறைகளில் ஒன்றாக எண்பேராயம் என்பதனை `எட்டுவகை நுதலிய அவையம்` எனக் குறிப்பிடுகிறது. எண்பேராயத்தில் படையினருடன் அமைச்சும் சேர்த்தே குறிப்பிடப்படுகின்றது. இந்த எண்பேராயம் குறிப்பிடும் `வாய்க்கடை காப்போர்` என்போர் வல்லுப் பலகையில் அரசனுக்கும் ஏனைய முதன்மையான காய்களுக்கும் முன்வரிசையில் நிறுத்தப்படும் `காலாள்` ( pawn ) எனும் காய்களை ஒத்துப் போவதனைக் காணலாம் யானை ஊர்வோர் என்பது யானைக்காயினையும், குதிரை ஊர்வோர் என்பது குதிரைக்காயினையும், `கரணத்தின் திரள்கள்` என்பது அமைச்சர் எனும் காயினையும் ஒத்திருப்பதனைக் காணலாம். இந்த `எண்பேராயம்` வல்லாட்டத்துக்கான கூறுகள் யாவும் சங்க காலத்திலிருந்தமையினை மேலும் உறுதி செய்வதுடன், இந்த `எட்டு` என்ற எண்ணின் மடங்குகளுடன் வல்லாட்டத்துக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதனையும் நாம் நோக்கலாம்.

இலங்கையில் கண்டியினை அரசாண்ட கடைசி மன்னனான சிறீ விக்கிரம ராச சிங்கன் (Sri Wickrama Raja Sinha)என்பவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். இவன் 1815ஆம் ஆண்டு வரைக் கண்டி அரசகத்தினை அரசாண்டிருந்தான். அவன் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு இந்தியாவிலுள்ள வேலூருக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு ஆங்கிலேயர்களால் சிறையில் அடைக்கப்பட்டான். அவ்வாறு இராசசிங்கன் கைது செய்யப்படும் போது, தன்னுடன் ஒரு வல்லாட்டப் பலகையினையும் காய்களையும் எடுத்துச் செல்ல இசைவு பெற்று அவற்றினை எடுத்துச் சென்றிருந்தான். இதன் மூலம் 1815ஆம் ஆண்டளவில் கூடத் தமிழரிடம் வல்லாட்டமிருந்து வந்தது தெளிவாகின்றது. இராசசிங்கன் விளையாடிய வல்லுப்பலகையினை காய்களுடன் இன்றும் வேலூர் அரச

அருங்காட்சியகத்தில் காணலாம்.

இராசசிங்கனின் வல்லுப்பலகையினை 2018ஆம் ஆண்டு மே 17ஆம் திகதியன்றுவேலூர்அருங்காட்சியகத்தில்மக்கள்பார்வையிடுவதனைப் படமாக மேலே காண்க (படம்– இந்து செய்தித்தாள்).




**வல்லாட்டம் தொடர்பான தமிழ் சார்ந்த புராணக்கதைகள் :–**

புராணங்கள் ஒரு போதும் வரலாறு ஆகாது என்ற தெளிவுடனேயே இத் தலைப்பினுள் உள்ள செய்திகளைக் காண வேண்டும். இங்கு உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம், அதாவது புராணக்கதைகள் வரலாறு அல்லவெனின் அவற்றினை நாம் ஏன் இங்கு பார்க்க வேண்டும் என்ற கேள்வி எழலாம். அதற்கு இரு காரணங்களுண்டு. முதலாவதாக வல்லாட்டத்தின் வரலாற்றினை வட இந்தியாவோடு தொடர்புபடுத்திய பல வரலாற்றாளர்களும் புராணங்களையும் சேர்த்தே ஆய்ந்துள்ளனர், இரண்டாவதாக ஒரு சமூகத்திலுள்ள கூறுகளே தெய்வத்தன்மையுடன் கற்பனையினைக் கலந்து புராணங்களாகப் படைக்கப்படும், அதாவது சமூகத்திலுள்ளவற்றினையே கற்பனை கலந்து புராணங்களாக மிகைப்படுத்தலுடன் மாறும். அந்த வகையிலேயே தமிழர் சார்ந்த புராணத் தொன்மக் கதைகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

வல்லக்கோட்டை முருகன் கோயில் என்றொரு முருகன் கோயிலானது காஞ்சிபுரத்திலுள்ள வல்லக்கோட்டைக்கு அருகில் உள்ள திருப்பட்டி என்னும் ஊரிலுள்ளது. இக் கோயிலின் தொன்மம் தொடர்பாகவுள்ள ஒரு செவி வழிக் கதையில், ` முருகன் வல்லாட்ட போர்நகர்வினை

இங்கு உருவாக்கியதால் அருகிலுள்ள கோட்டை வல்லகோட்டை என்றும், அருகிலுள்ள கோயில் வல்லக்கோட்டை முருகன் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது`, எனச் சொல்லப்படுகின்றது. அதே வேளை வல்லம் என்ற ஊரின் பெயரால் ஏற்பட்ட பெயரே வல்லக்கோட்டை என்று மற்றொரு கருத்துமுள்ளது. இங்கு முருகன் வல்லுப்போரினை உருவாக்கியதான தொன்மக் கதைக்கு ஏற்கனவே நாம் பார்த்த பரிபாடல்தான் காரணமோ என்பதும் ஆய்வுக்குரியது.

**வில்லு சொரி பகழியின் மென் மலர் தாயின**
**வல்லு போர் வல்லாய் மலை மேல் மரம்**
**வட்டு உருட்டு வல்லாய் மலைய நெட்டுருட்டு"**
**: பரிபாடல் 18: 40-42**

மேலுள்ள பரிபாடலில் `வல்லுப்போர் வல்லோய்` என முருகன் சொல்லப்படுவதனைக் கொண்டு, மேலுள்ள புராணக்கதை புனையப்பட்டதா என்பதும் ஆய்வுக்குரியது.

தமிழ்நாட்டிலுள்ள மற்றொரு கோயிலின் பெயர் - பூவனூர் சதுரங்க வல்லபநாதர் கோயில். (`வல்லபநாதர்` பெயரும் ஆய்வுக்குரியது ). இக் கோயிலானது `ஐந்தமர்ந்து ஆடுவான்` என அப்பரால் பாடப்பட்ட கோயில்.

**'ஆவின் மேவிய ஐந்தமர்ந்து ஆடுவான்**
**தூவெண் ணீறு துதைந்த செம்மேனியான்**
**மேவநூல் விரிவெண்ணியின் தென்கரைப்**
**பூவனூர் புகுவார் வினை போகுமே!'**

இக் கோயிலில் சித்தர் வடிவில் வந்து சிவன் அம்மனுடன் வல்லாட்டம் ஆடிய கோயில் எனவும், அதனாலேயே `வல்லபநாதர்` என்ற பெயர் ஏற்பட்டதாகவும் ஒரு புராணக்கதை இக் கோயினை வைத்து உண்டு. அந்தப் போட்டியில் அம்மனை வென்று சிவன் மணம் முடித்ததாக அக் கதைஅமையும் . வல்லாட்டத்தில் வல்லுநரான சித்தர் யாருக்கோ எழுப்பப்பட்ட பள்ளிப்படையினை வைத்துப் பின்னப்பட்ட புராணக்கதையாகக் கூட இது இருக்கலாம். எது எப்படியோ வல்லாட்டத்துடன் தொடர்படுத்தப்பட்டு இக் கோயில் பேசப்படுகின்றது.

சீவல்லபன் அல்லது சீவல்பா என்ற பாண்டிய மன்னன் 835ஆம் ஆண்டு முதல் 862ஆம் ஆண்டு (CE 835- CE 862) வரைப் பாண்டிய நாட்டினை ஆட்சி செய்த அரசனாவான். சீவல்லபன் இலங்கை மீது

படையெடுத்து , அனுராதபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட `முதலாம் சேனன்`எனும் அரசனைத் தோற்கடித்தான். இப்போரின் போது வல்லாட்ட நகர்வுகளை அடிப்படையாகக் கொண்டு போர் நகர்வுகளை நடாத்தியதாக ஒரு செவிவழிக் கதை உண்டு. வல்லாட்ட நகர்வு மூலம் படை நகர்வினைக் கணித்துப் போரில் வென்றதனால் , `வல்லபா` என்ற பட்டம் பாண்டிய மன்னனுக்குக் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. மேலுள்ள புராணக்கதைகளைப் போலவே இந்தச் செவிவழிக் கதையினையும் உறுதிப்படுத்தச் சான்றுகளில்லை.

மேலே கூறப்பட்ட புராணக்கதைகளோ அல்லது செவிவழிக் கதைகளோ அச்சொட்டாக அவ்வாறே நடந்தது என இந்த நூல் கூற வரவில்லை. மாறாக சமூகத்திலுள்ள வல்லாட்டத்தினையே இக் கதைகள் எதிரொலிக்கின்றன என்றே இந்த நூல் கூற வருகின்றது.

♦♦♦

# திருத்தி எழுதப்பட வேண்டிய வல்லாட்டத்தின் வரலாறு

பேராசிரியர் பிஷ்க் (Prof.Daniel Willard Fiske ) அவர்கள் `ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தாட்டம் (Chess) எவ்வாறிருந்தது என்பது பற்றிய தெளிவான ஆவணங்கள் எதுவுமில்லை` எனக் கூறியதனை ஏற்கனவே இந்த நூலில் பார்த்துள்ளோம். ஏழாம் நூறறாண்டளவில் இந்தியாவிலிருந்து வல்லாட்டமானது பாரசீகத்துக்கும், பின்னர் ஐரோப்பாவுக்கும் வந்து சேர்த்து விட்டமையினால் ; அதற்குப் பின்னரான வரலாறு எழுத்துகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளமையால் பிற்கால வரலாறு தெளிவாகவே உள்ளது. எனவே ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னரான வல்லாட்ட வரலாற்றிலேயோ அல்லது இந்தியாவில் குப்தர் காலத்தில் இந்தாட்டம் `சதுரங்கா` என்ற பெயரில் இருந்தது என்பதிலோ இந்த நூலுக்கு வேறுபட்ட கருத்தில்லை. எங்கு வேறுபாடு ஏற்படுகின்றது எனில், குப்தர் காலத்துக்கு (பொது ஆண்டு நான்காம் ஆண்டு முதல் பொ.ஆ ஆறாம் நூற்றாண்டு CE 4th cent` - CE 6th cent`) முன்னரே வல்லாட்டமானது இருந்துள்ளது என்பதிலேயே வேறுபாடு ஏற்படுகின்றது. சங்க காலத்திலேயே (பொ.ஆ.மு 2500 முதல் பொது ஆண்டு வரையான) காலத்திலேயே வல்லாட்டமானது தமிழரிடையே இருந்தது என்பதனையே இந்த நூல் பதிவு செய்ய விரும்புகின்றது.

சிந்துவெளி நாகரிகத்திலேயே ஒரு வகையான பலகையாட்டம் சிந்துவெளி மக்களிடமிருந்துள்ளது என்பதனை அகழ்வாய்வுச் சான்று கொண்டு இந்த நூலில் ஏற்கனவே பார்த்தோம். இந்த இடத்தில் உருசியா நாட்டின் வல்லாட்ட வீரரும் எழுத்தாளருமான யூரி லோவோவிச் அவெர்பாக் எழுதிய நூலொன்றில் ( A History of Chess: From Chaturanga to the Present Day by Averbakh, Yuri, Kasparov ) குறிப்பிட்டுள்ள ஒரு செய்தி கவனத்திலெடுக்கப்பட வேண்டியது. அவரது கூற்று பின்வருமாறு.

*“ இந்தியாதான் செஸ் ஆட்டத்தின் பிறப்பிடம் என்பது பொதுக் கருத்து. இந்தியாவுக்கு மூன்று முறை பயணித்துப் பல்வேறு*

*பகுதிகளையும் பார்த்துள்ளேன். பல்வேறுபட்ட அருங்காட்சியகங்கள், கோயில்கள் , நினைவிடங்கள் எனப் பார்த்துள்ளேன். தமிழ்நாட்டின் சென்னையிலுள்ள அருங்காட்சியகத்தில் ( National museum 0f Tamil Nadu) காணப்பட்ட களிமண்ணிலான சிறு-சிலைகள்( Clay figurines ) சில எனது கண்களைப் பறித்தன. அவை மொகஞ்சதாரோப் பகுதி அகழ்வாய்வில் பெறப்பட்டவை. பொது ஆண்டுக்கு முந்திய மூன்றாம் மிலேனியத்தினைச் சார்ந்தவை. இவை சிந்துவெளி நாகரிகத்தினைச் சேர்ந்த பலகையாட்டத்தின் காய்கள். இது நடந்தது 1975ஆம் ஆண்டில். இக் களிமண் காய்கள் செஸ் காய்களின் முன்னோடி எனலாம்."*

: யூரி லோவோவிச் அவெர்பாக் ( A History of Chess: From Chaturanga to the Present Day by Averbakh, Yuri, Kasparov)

அறிஞரின் மேலுள்ள கருத்தும் சிந்துவெளி நாகரிகத்தில் வல்லாட்டத்தினை ஒத்த ஒரு வகையான பலகையாட்டம் இருந்துள்ளதனை உறுதிப்படுத்துகின்றது. சிந்துவெளியில் காணப்பட்ட குறித்த ஆட்டத்துக்கான அகழ்வாய்வுச் சான்றுகள் உள்ள போதும், ஆட்டத்தின் இயல்பினை அறிந்து கொள்வதற்கான இலக்கியச் சான்றுகள் எதுவுமில்லை. சங்ககாலத்திலோ அகழ்வாய்வுச் சான்றுகளுடன் இலக்கியச் சான்றுகளுமுள்ளன.

இப்போது வல்லாட்ட வரலாற்றினைச் சுருக்கமாகப் பார்ப்போம். சிந்துவெளி நாகரிகத்தில் ஒரு வகையான பலகையாட்டம் வல்லுவினை ஒத்துக் காணப்பட்டுள்ளது. அதன் இயல்பினை அறிவதற்கான இலக்கியச் சான்றுகள் எதுவுமில்லை. தமிழ்நாட்டில் `கட்டாட்டம்` என்றொரு ஆட்டம் இருந்துள்ளது. இந்தக் கட்டாட்டமானது ஒரு படிமலர்ச்சியில் வளர்ந்து வந்துள்ளதை மூன்று வகையான கட்டாட்ட வடிவங்களைக் கொண்டு இந்த நூலில் ஏற்கனவே பார்த்தோம். மூன்றாவது கட்டாட்டவகையின் அடுத்த கட் ட வளர்ச்சியாக `ஆடு புலி ஆட்டம்` காணப்பட்டதனையும் தொல்லியல் சான்றுகள், இலக்கியச் சான்றுகள் என்பவற்றினைக் கொண்டு பார்த்தோம். ஆடு புலியாட்டமானது இன்றுவரைத் தமிழரிடையே தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஆடுபுலியாட்டத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக `வல்லு` எனும் ஆட்டமானது தமிழரிடையே சங்க காலத்திலேயே இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி விட்டது.

சங்க காலத்திலேயே தமிழரிடம் வல்லாட்டம் காணப்பட்டமைக்குச்

சான்றாகப் பின்வருவவற்றினைக் காட்டலாம்.

- **அகழ்வாய்வுச் சான்றுகள் (கீழடி மற்றும் பிற அகழ்வாய்வகள்)**
- **இலக்கியச் சான்றுகள் (சங்க இலக்கியங்கள்)**
- **இலக்கண நூல் வழிச் சான்றுகள் (தொல்காப்பியம்)**
- **சொல்லடைகள் (காய் நகர்த்துதல், கட்டம் கட்டுதல்)**

**மேலுள்ள சான்றுகளினடிப்படையில் வல்லாட்டமானது** தமிழரிடையே சங்க காலத்தில் தோன்றிய ஓர் ஆட்டம் என்பதனை இந்த நூல் ஏற்கனவே விளக்கியுள்ளது. அதனையே வல்லாட்டத்தின் திருத்தி எழுதப்பட வேண்டிய வரலாறு என இந்த நூல் முன்வைக்கின்றது.

இந்த நூல் வெளி வந்தவுடன் வரலாறு திருத்தப்பட்டு விடும் என்பதல்ல, அது ஒரு பெரும் செலவு(பயணம்). அச் செலவில் எடுத்து வைக்கப்படும் ஒரு சிறு அடியாக இந்த நூல் இருக்கும் என்பது திண்ணம்.

**வல்லாட்ட (செஸ்) வரலாற்றின் முதன்மையான நிகழ்வுகள் : -**

இதுவரைப் பார்த்தவற்றைக் கொண்டு வல்லாட்டம் கடந்து வந்த பாதையினை கால ஒழுங்கில் அடுக்குவோம்.

- இற்றைக்கு 4500 ஆண்டுகளுக்கு முன்னரே (பொ.ஆ.மு 2500) சிந்துவெளி நாகரிக காலத்தில் ஒரு வகையான பலகையாட்டம் காணப்படுகின்றது. அது இன்றைய வல்லாட்டத்தினை ஒத்துக் காணப்படுகின்றது. யூரி லோவோவிச் அவெர்பாக் ( A History of Chess: From Chaturanga to the Present Day by Averbakh, Yuri, Kasparov) என்ற அறிஞரும் இக் கருத்துடன் ஒத்துப் போகின்றார். மெசொப்பொத்தேமிய நாகரிகத்திலும் பின்னரான காலப்பகுதியில் ஒரு வகையான பலகையாட்டம் காணப்பட்டுள்ளது எனச் சிலர் கருதுகின்ற போதும் , அது தொடர்பான தெளிவான சான்றுகளில்லை. சில வேளைகளில் சிந்துவெளி நாகரிகத்திலிருந்து மெசொப்பொத்தேமியாவுக்கு, பலகையாட்டம் போயிருக்கலாம்; எனினும் இது குறித்து நாம் அதிகமாக இங்கு அக்கறைப்பட வேண்டியதில்லை, ஏனெனில் சிந்துவெளி நாகரிகத்திலிருந்த பலகையாட்டத்தின் இயல்பினைக் கூட உறுதிப்படுத்த இலக்கியச் சான்று எதுவுமில்லை.

- சங்ககாலத்திலேயே தமிழரிடையே வல்லாட்டம் தோன்றிவிட்டது. கட்டாட்டம் படிப்படியாக மூன்று வடிவங்களில் படிமலர்ச்சியடைந்து,

ஆடு புலி ஆட்டமாகிப் பின் வல்லாட்டமாக மாறுகின்றது. இந்த மாற்றம் சங்ககாலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முந்திய காலம் முதல் இற்றைக்கு 2000 ஆண்டுகள் வரையான காலப்பகுதியே சங்ககாலம் எனப்படுகின்றது, அதாவது பொ.ஆ.மு 2500 முதல் பொது ஆண்டு வரையான காலம் (BCE 2500 – Common era) சங்ககாலம் எனப்படுகின்றது. சங்ககாலத்தில் வல்லாட்டம் இருந்தமைக்கான அகழ்வாய்வுச் சான்றுகள், இலக்கியச் சான்றுகள், இலக்கணச் சான்றுகள், சொல்லாடல்கள் எனப் பல்வேறு சான்றுகளை இந்த நூலில் ஏற்கனவே விரிவாகப் பார்த்துள்ளோம்.

● சங்ககாலத்தில் தோன்றிய வல்லாட்டமானது பின்னரான ஏதோ ஒரு காலப்பகுதியில் வட இந்தியாவுக்கும் சென்றுள்ளது. குப்தர் காலத்தில் இந்த ஆட்டமானது வட இந்தியாவிலிருந்து பாரசீகத்திற்குச் சென்று, பின்னர் ஐரோப்பாவினை அடைந்தது. இதற்கிடையில் சீனாவுக்கும் வல்லாட்டமானது போயிருந்தது. இந்தாட்டமானது `சியாங்கி` ( Xiangqi ) எனச் சீனாவில் அழைக்கப்படுகின்றது. சியாங்கி (Xiangqi) என்பதற்கு யானைகளின் ஆட்டம் என்பதே பொருள். யானை எனும் போதே இந்தாட்டம் இந்தியப் பகுதியிலிருந்தே வல்லானது சீனாவுக்குப் போயிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது. தமிழரின் வல்லாட்டத்தில் யானை பெற்றிருந்த முதன்மையினை ஏற்கனவே பார்த்துள்ளோம் (வல்யானை, ஆனைக்குப்பு ...). இந்த ஆட்டமானது பாரசீகத்தினை அடைவதற்கு முன்னரே சீனாவுக்குச் சென்றுவிட்டது. செஸ் வரலாற்றாசிரியர்கள் பலரும் ஐரோப்பாவிலிருந்தே ஐரோப்பியப் பார்வையில் பார்த்தமையால் , சீனாவின் யானையாட்டம் பற்றி வரலாற்றில் பெரிதும் பேசப்படவில்லை.

● ஏழாம் நூற்றாண்டளவில் வல்லாட்டமானது பாரசீகத்தினை அடைகின்றது. அங்கு சத்ரஞ்ச் (Shatranj) என்ற பெயரில் வல்லாட்டமானது அழைக்கப்பட்டது.

● ஒன்பதாம் அல்லது பத்தாம் நூற்றாண்டளவில் வல்லாட்டமானது ஐரோப்பாவினை அடைகின்றது.

● அரசியானது (Queen) 997ஆம் ஆண்டளவிலும், பிசப் எனும் காயானது 1200ஆம் ஆண்டளவிலும் ஐரோப்பாவில் அறிமுகமாகின்றது. இதற்கு ஐரோப்பாவில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களே காரணம். இவ்விரு வகையான காய்களும் 1400ஆம் ஆண்டளவிலேயே அதிக வலுப் பெற்றுத் தத்தமது நகர்வுத்

திறன்களை அதிகரித்துக் கொள்கின்றன. 1450ஆம் ஆண்டளவில் அரசியின் நகர்வு மேலும் வலுப்பெற்ற பின்னர் ஆட்டம் இன்னமும் விறுவிறுப்பாக மாறுகின்றது.

- 1575ஆம் ஆண்டளவிலேயே முதலாவது முறைசாராத போட்டி நடைபெறுகின்றது. முதல் முறைசாரா அனைத்துலகப் போட்டி இத்தாலியர்களான லியோனார்டோ டா குட்ரி மற்றும் பாவ்லோ போய் ஆகியோர் ஸ்பெயினின் ரூய் லோபஸ் மற்றும் அல்போன்சோ செரோன் ஆகியோருடன் விளையாட மாட்ரிட்டில் உள்ள இரண்டாம் பிலிப்பின் அரண்மனைக்குச் சென்றபோது நடந்தது.
- முறைசார்ந்த முதலாவது போட்டித் தொடரானது இலண்டனில் 1851ஆம் ஆண்டளவில் இடம்பெறுகின்றது.
- 1861ஆம் ஆண்டளவில் நேரக்கட்டுப்பாடு அறிமுகமாகின்றது.
- 1997ஆம் ஆண்டில் கணினி இந்த ஆட்டத்துக்குள் நுழைகின்றது.

இவ்வாறான பல மாற்றங்களினூடாகவே வல்லானது இன்றைய நிலையினை அடைந்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளின் பங்களிப்புடனேயே வல்லாட்டம் இன்றைய நிலையினை அடைந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை; ஆனால் இதற்கான விதை தமிழரினால் சங்ககாலத்தில் போடப்பட்டது. குப்தர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வல்லாட்டமானது தமிழரிடமிருந்துள்ளது.

வல்லாட்டத்தின் வரலாறு ஒரு புறமிருக்க, செஸ் விளையாட்டுக்கான தமிழ்ச் சொல்லாக `வல்லு` என்பதனைத் தமிழர் பயன்படுத்த வேண்டும் என்பதும் இந்த நூலின் ஒரு நோக்கமாகும். அந்த வகையில் வல்லாட்டம் தொடர்பான சில கலைச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களையும் இந்த நூல் முன்வைக்கின்றது.

♦♦♦

# வல்லாட்ட அருஞ்சொற்கள்

வல்லாட்டத்தில் பயன்படுத்தப்படும் முதன்மையான ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச் சொறகளினைக் கீழே பட்டியலிட்டுள்ளேன். இச் சொற்கள் யாவும் என்னால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் எனும் அமைப்பினரால் நடாத்தப்படும் இணைய வழியிலான பன்னாட்டு அமர்வில் முன்வைக்கப்பட்டவை. இவற்றில் மிகப் பெரும்பாலானவை பிற அறிஞர்கள் சிலரால் மீளாய்வு செய்யப்பட்டுப் பின்னர் சொற்குவை (sorkuvai.com) இணையத்தளத்திலும் ஏற்றப்பட்டுள்ளன. இச்சொற்களில் சில பழைய இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டவை, ஏனைய மிகப் பெரும்பாலான சொற்கள் என்னால் ஆக்கப்பட்டவை. இனிச் சொற்களைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| Chess | = | **வல்லு** (**'வல்' = நகர்வு என்ற வேர்ச்சொல்**) |
| Chess game | = | **வல்லாட்டம்** |
| Chess board | = | **வல்லுப்பலகை** |
| Chess piece | = | **வல்லுக்காய் / வல்லநாய் / வல்லுநாய்** |
| King | = | **அரசன்** |
| Queen | = | **அரசி** |
| Bishop | = | **தேர் / அமைச்சர்** |
| Knight | = | **குதிரை/ வீரத்திருதகை** |
| Rook | = | **ஆனை** |
| Castle | = | **அரண் / கோட்டை** |
| Castling | = | **அரண் செய்தல் / கோட்டை கட்டுதல்** |

Touch move = தொடுநகர்வு

Legal Move = முறைசார் நகர்வு

illegal move = முறைசாரா நகர்வு

Stalemate = இக்கட்டு

Checkmate = முற்றுகை

Check = எச்சரிக்கை

Capture = கைப்பற்று

En Passant = கடந்து போதல்

Promotion = மேம்படுத்தல்

Classical chess = மரபு வல்லு

Blitz chess = மின் வல்லு (மின்னல் என்பதன் சுருக்கமாக 'மின்')

Rapid chess = விரைவு வல்லு

Bullet chess = நுணுத்த வல்லு (நுணுத்தம் = மணித்துளி)

Blunder = மடமை

Fork = ஈரடி (இரு பக்க அடி என்ற பொருளில்)

Pin = குத்தி வைத்தல்

Skewer = ஊடுருவி

வல்லாட்டம்

Counter defense = எதிர்க்காப்பு

Abort = விலகல்

Resign = துறப்பு

Grandmaster (GM) ) = பேராதன் (பேர் (பெரிய)+ ஆதன் )

Woman grandmaster ( WGM ) = பேராதி

International master ( IM ) ) = உலகாதன்

International woman master (WIM ) = உலகாதி

National master ( NM ) = தேயாதன் (தேயம் , ஆதன் )

National woman master (NWM = தேயாதி

FIDE ( The International Chess Federation) = அனைத்துலக வல்லாட்டக் கூட்டமைப்பு

Tie-breaker = சமன்முறி

Armageddon = தும்பைப்போர்

Rank = நிரை /வரிசை

File = நிரல் / கட்டு

Bishop pair = இரட்டைத் தேர்

Blindfold chess = பாரா வல்லு

Hanging piece = தொங்கும் காய்

Minor piece = மென்காய்

Major piece (or heavy) = வன்காய்

Pairing = இணைத்தல்

Strategy = மூலநுட்பம்

Tactic = துணைநுட்பம்

Battery = அடி (இதற்கான விளக்கம் ஏற்கனவே இந்த நூலிலுள்ளது)

Battery Formation = அடியெடுத்தல்

♦♦♦

# வல்லாட்டத்தில் தமிழரின் நிகழ்கால நிலை:–

வல்லாட்டத்தில் தமிழரின் இன்றைய நிலை பெருமைப்படக் கூடிய நிலையிலேயே உள்ளது. ஐப்பசி (செப்டம்பர் 2023) மாதத் தொடக்கததில் வல்லாட்டத் தர வரிசைப் பட்டியலில் முதல் பதினைந்து பேர்களில் மூவர் தமிழர்கள் (குகேஸ், விசுவநாதன் ஆனந்த், பிரக்ஞானந்தா); அந்த முதல் 15 வீரர்களில் இருபது வயதுக்குக் குறைந்தவர்கள் எனப் பார்த்தால், இருவரே வருவர், அவர்கள் இருவருமே தமிழர்கள் (குகேஸ், பிரக்ஞானந்தா) ஆவர். விசுவநாதன் ஆனந்த் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஐந்து முறை உலக வாகையாளராக வந்தவர் ( former five-time World Chess Champion).



Viswanathan Anand

**இந்தியாவின் முதல் பேராதன் ( GM ) ஆக வந்தவரும் இவரே!**

வருங்கால உலக வாகையாளராக வரக் கூடியவர்களாகக் கருதப்படும் இரு தமிழ் இளவல்கள் வருமாறு.



H.Gukesh



Praggnanandhaa

இவர்களை விட இன்னமும் பல தமிழர் வல்லாட்ட வல்லோர்களாக வருவதற்கான வாய்ப்புகளுண்டு. குறிப்பாக இளம்பரிதி என்ற தமிழ் இளவலினைக் குறிப்பிடலாம்.



Ilamparthi


சென்ற ஆண்டு (2022) உருமேனியா நாட்டில் இடம் பெற்ற 14 வயதுக்கு உட்பட்டோருக்கான வல்லாட்டப் போட்டியில் உலக வாகையாளராக வந்தவர் (World youth under 14 chess champion : A.R. Ilamparthi ). இவரும் ஒரு வல்லாட்ட வல்லோனாக வருவார் என்பதுடன் நல்லதொரு தமிழ்ப் பெயரினையும் கொண்டுள்ளார்.

இன்று இந்தியா முழுவதுமாக 83 பேராதன்கள் ( Grandmasters ) உள்ளனர் எனில் அதில் 29 பேர் தமிழ்நாட்டிலேயே உள்ளனர்.

தமிழ்நாடு வல்லாட்டத்தில் இவ்வளவு ஆதிக்கம் செலுத்துவதற்கு அண்மைக் காலத்தில் ஒருவர் மீண்டும் உரம் போட்டுளளார், அவரினை நாம் மறக்கக் கூடாது.

தமிழ்நாடு இன்று வல்லாட்டத்தில் பெற்றுள்ள இந்த பெருமை மிகு நிலைமைக்கு வித்திட்டவர் 'மனுல் ஆரோன் ' ஐயா அவர்கள். 1961 இல் தமிழ்நாட்டில் வளர்ந்த இவர்தான் இந்த ஆட்டத்துக்கான அடித்தளத்தினை தமிழ் மண்ணில் மீண்டும் விதைத்தவர். ' ' Michael Tal' ' என்ற பெயரில் இவர் நிறுவிய 'Chess club ' ஆனது அன்றைய சோசலிச சோவியத் யூனியன் அரசின் தாங்கலுடன் பல இளைய வீரர்களையும், பயிற்சியாளர்களையும் உருவாக்கியது. இக் கழகத்தால் உருவாக்கப்பட்ட வீரர்களில் ஒருவர்தான் முன்னைநாள் 'உலக வாகையாளர்' ( World champion ) விசுவநாதன் ஆனந்த்.

ஆண்கள் மட்டுமன்றித் தமிழ்ப் பெண்கள் கூட வல்லாட்டத்தில் ஒளிர்கின்றார்கள். வைசாலி, சவித்தா சிறீ போன்ற தமிழிச்சிகள் இப் பட்டியலில் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். நான் வாழும் இங்கிலாந்து நாட்டிலும் ஒரு தமிழ்ச் சிறுமி வல்லாட்டத்தில் சிறந்து




விளக்குகின்றார்.

இந்தாண்டு யூலையில் இங்கிலாந்தினைச் சேர்ந்த தமிழ்ச் சிறுமி `போதனா சிவானந்தன்` ( Bodhana Sivanandan) யோர்யியா நாட்டில் நடைபெற்ற எட்டு அகவைக்குட்பட்ட பெண்களுக்கான பிரிவில் வாகையாளராக முதலாவது இடம் பிடித்துள்ளார். உலகளவில் நடைபெற்ற இத் தொடரின் Rapid chess (விரைவு வல்லு) மற்றும் Blitz chess (மின் வல்லு) ஆகிய இரு வகையான போட்டிகளிலும் வாகை சூடியதுடன், தான் கலந்து கொண்ட அனைத்துப் போட்டிகளிலுமே வென்றுள்ளார். உலகளவில் போதனா முதலிடம் பெற்ற போட்டியில் , தமிழ்நாடு அரியலூர் மாவட்டத்தினைச் சேர்ந்த

தமிழ்ச் சிறுமி சர்வாணிகா மூன்றாவதாக வந்தமையினையும் குறிப்பிடலாம். ஆக உலகளவிலான ஒரு போட்டியில் முதல் மூன்று இடங்களில் இரண்டினைத் தமிழர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்னொரு வல்லாட்ட வீராங்கனையினையும் இங்கே சொல்லலாம். ஒலிம்பியாட் போட்டியில் இங்கிலாந்து அணியினைச் சார்புப்படுத்திய ஈழத் தமிழ்ப்பெண்ணான அக்சயா கலையழகன் என்பவரே அவராவார் .


Manuel Aaron in 1962

இவ்வாறு பல தமிழர்கள் உலகளவில் வல்லாட்டத்தில் வல்லுநர்களாக விளங்குவதற்கு அவர்களது மரபிலேயே வல்லாட்டம் கலந்திருப்பதும் ஒரு காரணமாகும்.





Akshaya will be one of the stars for England at the upcoming Olympiad

# வல்லாட்டம் விளையாடுவதால் கிடைக்கும் நன்மைகள்:-

1. மூளைப் பயிற்சியின் போது மூளையிலுள்ள தசை நார்களின் செயற்பாடுகள் கூடுவதனால், மூப்புக் காலத்தில் ஏற்படும் மறதிநோய் ( Dementia) தவிர்க்கப்படும் / பிற்போடப்படும். மருத்துவ ஆய்வுகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன.

2. குழந்தைப் பருவத்திலேயே வல்லு பழகுவதன் மூலம், குழந்தைகளின் மூளைச் செயற்பாடானது கூடும். குறிப்பாக dendrites (ஒருங்குமுனைப்புக்கள்) வளர்ச்சியடையும்.

3.குழந்தைகளின் IQ மட்டத்தினைக் கூட்டும்.

4. சிக்கல்களைத் தீர்க்கும் திறன் ( problem-solving skills ) கூடும்.

5. வெளிசார்ந்த ஆற்றல்களைக் கூட்டும்= Chess improves spatial skills

6. நினைவாற்றல் (memory ) விருத்தியடையும்.

7. மூளையின் இரு பக்கச் செயற்பாட்டினை (இடது,வலது பக்க) ஊக்குவிக்கும்.

8. குழந்தைகளின் ஆக்கத்திறன்(creativity) விருத்திக்கு உதவும்.

9. மனதை ஒருங்கிணைக்கும் திறனைக்(concentration) கூட்டும்.

10.திட்டமிடல் & ஆவதறிதல் (planning & foresight ) திறன்களைக் கூட்டும்.

இப்போது உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம்; இந்த விளையாட்டினை எந்த வயதில் ஒரு குழந்தைக்கு அறிமுகப்படுத்தலாம்? என்பதே அக் கேள்வியாகும்.

வல்லு விளையாட்டினை ஒரு குழந்தைக்கு அறிமுகப்படுத்தப் பொருத்தமான அகவை (வயது) என்பது குழந்தைகளின் தனிப்பட்ட இயல்புகளிற்கேற்ப மாறுபடும். குறித்த ஒரு அகவையினைச் சொல்லித்தான் ஆக வேண்டும் எனில், 6 தொடக்கம் 8 அகவை (6 to 8 years) வரை எனச் சொல்லலாம். 5 அகவை என்பது ஆகக்

குறைவாகவும், 9 அகவை என்பது ஆகப் பிந்தியது என்றும் சிலர் கூறுகின்றார்கள். அதே வேளை எந்த வயதானாலும் வல்லாட்டம் பழகியிருப்பது நன்மையே! வல்லாட்டம் பழகுவதன் மூலம் மேலுள்ள நன்மைகளைப் பெற்றுக் கொள்வதுடன், தமிழரின் மரபுசார்ந்த ஓர் ஆட்டத்தினைத் தெரிந்து கொள்கின்றோம் என்ற பெருமையும் ஏற்படும்.

**வணக்கம்**

♦♦♦

# துணைநூற்பட்டியல் :

*Lothal: A Harappan Port Town, :S. R. Rao*

*A History of Chess, :H. J. R. Murray India, : Al-Biruni)*


*A History of Chess: From Chaturanga to the Present Day, : Averbakh, Yuri, Kasparov*

*'தமிழர் நாட்டு விளையாட்டுகள் , : இரா.ாலசுப்பிரமணியம்*


*பண்பாட்டு அசைவுகள், : தொ. பரமசிவன்*


*'கீழடி 4' கையேடு, : தமிழ்நாடு அரசு*

"செஸ் எனும் ஆட்டமானது சங்ககாலம் முதலே தமிழரால் ஆடப்பட்டு வந்தது என்பதனை அகழ்வாய்வுச் சான்றுகள், இலக்கியச் சான்றுகள், இலக்கண நூல் சான்றுகள்,





சொல்லாடல்கள் போன்ற சான்றுகளைக் காட்டி நிறுவும் ஒரு முயற்சியே இந்த நூல். இன்றைய செஸ் ஆட்டம் இதே வடிவில் அப்படியே சங்ககாலத்தில் இருந்தது என்பதல்ல இந்த நூலின் கருத்து, மாறாக வல்லாட்டமே இன்றைய செஸ் ஆட்டத்தின் மூலம் என்பதே இதன் கருத்து. வல்லாட்டமானது ( செஸ்) குப்தர் காலத்துக்கு முன்னரே சங்ககாலத் தமிழரிடமிருந்துள்ளது".





வி.இ.குகநாதன்






பதிப்பகம் : மருது பதிப்பகம், ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா
அச்சகம் : அருணா எண்டர்பிரைசஸ், சென்னை, தமிழ்நாடு, இந்தியா
நூல் வடிவமைப்பு: இராமகிருஷ்ணன், 9940404363